விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 02.05.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 152 | பக்கங்கள் : 16




### மிரட்டும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை

# மூன்றாம் அலையால் நாட்டுக்கு பேராபத்து!

### பல்வேறு கட்டுப்பாடுகள், அறிவுறுத்தல்களுடன் புதிய சுகாதார வழிகாட்டுதல் நேற்று வெளியீடு

கொழும்பு, மே 01

நாட்டினுள் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புக்கள் மறுஅறிவித்தல் வரையிலும் மூடப்படும் என்பன உள்ளிட்ட புதிய சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன நேற்று வெளியிட்டுள்ளார்.

15



## 9 பேர் தொற்றுக்கு பலி

கொழும்பு, மே 02

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 09 பேர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 687 ஆக அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்தார். (எ)

## பி.சி.ஆர். சோதனையை நிறுத்துமாறு அரசு அறிவிக்கவில்லை

கொழும்பு, மே. 02

பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோவிட் கட்டுப்பாட்டு செயலணியினால் யாருக்கும் அறிவிக்கப்படவில்லை.

குறிப்பிட்டவொரு பிரதேசத்தில் குறைந்தளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அதனை தனிமைப்படுத்திய பின்னர், தேவையானளவு பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று சில பிரதேசங்களுக்கு அறி

15

## மே 18 நினைவேந்தலை அரசாங்கம் தடுக்காது!

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

முல்லைத்தீவு, மே. 02

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு கோட்டாபய - மஹிந்த தலைமையிலான அரசாங்கம் தடை விதிக்காது என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இறந்தவர்களுக்கான மதக் கடமைகளை நிறைவேற்றுவது அனைவரினதும் உரிமையெனவும் அவர்

15

## மகனின் விடுதலைக்காக காத்திருந்த தந்தை ஒருவர் வியாழன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே. 02

மகனின் விடுதலையை எதிர்பார்த்து 12 வருடங்களாக காத்திருந்த தமிழ் அரசியல் கைதியின் தந்தை ஒருவர் உடல் நிலை பாதிக்கப்பட்டு கடந்த வியாழன் உயிரிழந்தார்.

தந்தையின் இறுதிச் சடங்கில் கூட மகன் கலந்து கொள்ள முடியாததால் உறவுகள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியை சேர்ந்த எஸ்.இராசவல்ல

15

## வடமாகாணத்தில் மேலும் 25 பேருக்கு கொரோனா!

### வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பலர் தொற்றாளர்களாக அடையாளம்

யாழ்ப்பாணம், மே 01

வடக்கு மாகாணத்தில் மேலும் 25 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுச் சனிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 454 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு

15

### நாளாந்தம் 1000 தொற்றாளர்

## இந்தியாவை போன்ற நிலைமை இலங்கையில் ஏற்படும் அபாயம்

### சுதத் சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, மே. 02

நாட்டில் நாளாந்தம் ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்படுவதிலிருந்து கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளமை தெளிவாகின்றது.

இதற்கமைய தொற்றாளர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிக்குமாயின் இந்தியாவில் ஏற்பட்டுள்ளதைப்

15

## நாள் தோறும் எகிறும் எண்ணிக்கை நேற்று 1,699 பேருக்குக் கொரோனா!

கொழும்பு, மே 01

இலங்கையில் நேற்று மாத்திரம் 1,699 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புது வருட கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் இதுவரையில் ஒரு இலட்சத்து 9,846 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 503 பேர் நேற்றுப் பூரண குண

15

## ஊரடங்கு போலிச் செய்தி சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்



கொழும்பு, மே 02

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என பொய்யானதும், போலியானதுமான செய்தியை சமூக ஊடகங்களில் பரப்பிய நபர் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் அலை...

புதிய வழிகாட்டுதலின் கீழ், மூன்றாம் நிலை கொரோனா அபாயத்துக்குப் பொருந்தும் வகையில் பொது மக்கள் செயல்பாட்டுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, புதிய வழிகாட்டுதல்களுக்கு அமைய பொதுமக்கள் ஒன்று கூடுதல் உள்ளிட்ட செயல்பாடுகளுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டடல்கள் வருமாறு:

பொதுப் போக்குவரத்தின் போது, ரயில்கள் மற்றும் பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும்.

வாடகை வாகனப் பயன்பாட்டின் போது ஓட்டோக்களில் மற்றும் மோட்டார் வாகனங்களில் ஒரே நேரத்தில் இரண்டு பயணிகளை மட்டுமே கொண்டு செல்ல முடியும்.

வேறு வகையான வாடகை வாகனங்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும்.

கொரோனா தொற்று அல்லாமல் மரணிப்போரின் இறுதிக்கிரியைகளை 24 மணிநேரத்துக்குள் செய்ய வேண்டும்.

இறுதிக்கிரியைகளில் 25 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புக்கள், மறுஅறிவித்தல் வரையிலும் மூடப்படும்.

வெசாக், ரமழான் பெருநாள்களை வீட்டிலிருந்தே கொண்டாட வேண்டும்.

ஹோட்டல்களில் கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை நடத்துவதற்கு அனுமதி கிடையாது.

அரச ஊழியர்கள், பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் வருகை தரவேண்டும்.

தனியார்த்துறை ஊழியர்கள் குறைந்தளவானோர் அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

மாநாடு, கருத்தரங்கு, கூட்டங்கள், பகல்போசன விருந்துபசாரம், மே 21 ஆம் திகதி வரை தடைசெய்யப்பட்டுள்ளன.

அங்காடிகள், மொத்த வர்த்த நிலையங்கள், நிதி நிறுவனங்கள், புடைவை கடைகள், சில்லறை கடைகளில், மொத்த நுகர்வோரின் எண்ணிக்கை 25 சதவீதத்துக்குள் மட்டுப்படுத்தவேண்டும்.

மத வழிபாட்டு இடங்களில் பொது மக்கள் ஒன்றுகூட முடியாது. கைதிகளைப் பார்வையிட முடியாது.

நீதிமன்றத்தில் முழு கொள்ளளவு 25 சதவீதத்துக்கு இருக்கவேண்டும். மக்கள் வருகை தரமுடியும்.

இசைக்கச்சேரி, கரையோர ஒன்றுகூடல்கள், உற்சவங்களுக்கு முழுத்தடை.

மே 4 ஆம் திகதி முதல் மே 20 ஆம் திகதி வரை திருமண வைபவங்களுக்கு அனுமதி இல்லை.

மே 20 ஆம் திகதியன்று நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு அது திருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## மே 18...

குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர அரசாங்கம் தடைவிதிக்குமா என்று குறித்து முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் விவகாரம் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பாராளுமன்ற தேர்தலிலும் எமது கையை பலப்படுத்தினால் அரசியல் கைதிகளின் விடுதலை உடனடியாக இடம்பெறும் என்றேன். அது விருப்பமில்லாமலே மக்கள் தனக்கு வாக்களிக்கவில்லை என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பலர் உங்களிடம் நேரடியாகவே வருகை தந்து கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் உள்ளது என அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல பலருக்கு பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்ற தேர்தலிலும் அரசியல் கைதிகள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு எனக்கு கூடிய வாக்குகளையும் கூடிய ஆசனங்களையும் தருமாறு கேட்டிருந்தேன்.

அப்படி தந்திருந்தால் இந்த பிரச்னையை உடனடியாக தீர்ப்பேன் என்றும் சொல்லியிருந்தேன். ஆனால், மக்கள் அந்த பிரச்னையை தீர்க்க விரும்பவில்லையோ என்ற சந்தேகம் கூட எழுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

## பி.சி.ஆர். சோதனை...

விக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே இராணுவத்தளபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் கட்டுப்பாட்டு செயலணியின் ஊடாக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறிவிக்கவில்லை. கடந்த காலங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு குறைவடைந்தமையே தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கும் காரணம் என்று கூறப்படுகிறது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏதேனுமொரு பிரதேசத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்படுபவர்களாயின் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அதற்கமைய பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவும் அதிகரிக்கும். எனவே அதனை நிறுத்த முடியாது. அதற்கமைய தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் அல்லது குறைவடையும்.

இதனை திரிபுபடுத்த முடியாது. அதிகளவில் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்தால் தொற்றாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று கருத முடியாது. கடந்த காலங்களில் சுமார் 10,000 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட போது 150 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இதே போன்று 15,000 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 600 - 700 தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

எவ்வாறிருப்பினும் சில பகுதிகளில் அநாவசியமாக அளவுக்கதிகமாக பி.சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக அறியக்கிடைத்துள்ளது. குறிப்பிட்டவொரு பிரதேசத்தில் இரு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதற்காக ஆயிரக்கணக்கில் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மஹியங்கனை பிரதேசத்தில் சுமார் 15 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமைக்காக 8,000 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே சுமார் 10 - 15 தொற்றாளர்கள் ஏதேனுமொரு பிரதேசத்தில் இனங்காணப்பட்டால் அது தொடர்பில் உரிய தரப்பினருக்கும் அறிவித்து , பின்னர் அந்த பிரதேசத்தை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மதிப்பீடு செய்து தேவையானளவு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். எந்தவொரு சந்தர்ப்பத்தில் கொவிட் கட்டுப்பாட்டு செயலணியினால் பி.சி. ஆர். பரிசோதனைகளை குறைக்குமாறு அறிவிக்கப்படவில்லை -என்றார்.

# தமிழ் தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது

கொழும்பு, மே. 02

தமிழ் தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் அ.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வானது தமிழரசு கட்சி அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மே நாள் தொடர்பான உரைகள் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்

## நாள் தோறும்...

மடைந்து வீடு திரும்பினர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 96 ஆயிரத்து 478 ஆக அதிகரித்தது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 678 ஆக அதிகரித்தது. (அ-எ)

## மகனின்...

வன் (வயது 79) என்பவரே உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

சுன்னாகத்தை சேர்ந்த இராசவல்லவன் தபோரூபன் (வயது-39) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவருக்கான வழக்கு இடம்பெற்று கடந்த 2019 ஆம் ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

மகன் கைது செய்யப்பட்ட பின்னர் தந்தை மனதளவில் பாதிக்கப்பட்டதுடன் நாளுக்கு நாள் உடல் நிலையும் பாதிக்கப்பட்டிருந்தார்.

மகனின் விடுதலைக்காக இவர் பல முயற்சிகளை மேற்கொண்டும் பயன் கிடைக்கவில்லை. மகனின் தண்டனைக்காலம் இன்னும் சில ஆண்டுகளில் முடியவுள்ள நிலையில் தந்தையார் உயிரிழந்தமை உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அவர்களின் உறவுகள் 17 பேர் வரையில் உயிரிழந்தனர்.

## வடமாகாணத்தில்...

உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 25 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 7 பேரும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 4 பேரும், முல்லைத்தீவில் மூவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். திருநெல்வேலியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் 3 பேரும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற இருவருமாக 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பொதுச்சந்தையில் வியாபாரிகளிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. பூவரசம் குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

மன்னார் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, மாங்குளம் ஆதார வைத்தியசாலை மற்றும் மல்லாவி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்ற தலா ஒரு நோயாளிக்கு தொற்று கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ-03)

## ஊரடங்கு...

பித்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதாவது நேற்று நள்ளிரவு முதல் மே மாதம் 17 ஆம் திகதி வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலாகும் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார். அந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான செய்தியை இணையத்தளங்களில் பதிவேற்றிய நபர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-எ)

## இந்தியாவை...

போன்றதொரு நிலைமை இலங்கையிலும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது.

எனவே, அபாயத்தை தவிர்த்துக் கொள்வதற்கு மக்கள் சார்பில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

வெள்ளியன்று 1600 இற்கும் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்தியாவில் தற்போதுள்ள நிலைமையைக் கவனத்தில் கொண்டு முன்னாயதங்களை மேற்கொள்வதன் மூலம் இந்த நிலைமையை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். ஆனால், அங்குள்ள நிலைமையைப் போன்று ஏற்படக்கூடிய அபாயமும் உண்டு.

எனவே, தொற்றுக்கான ஏதேனுமொரு அறிகுறி காணப்படுபவர்கள் அவர்கள் வீடுகளிலேயே தங்கியிருக்காமல் வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும், ஏதேனுமொரு வகையில் தொற்றாளர் எண்ணிக்கை பாரியளவில் அதிகரிக்குமானால் இந்தியாவில் ஏற்பட்டுள்ளதைப் போன்றதொரு நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

எனவே, இந்த அபாயத்தை தவிர்த்துக் கொள்வதற்காக மக்கள் அவர்கள் சார்பில் பொறுப்புடன் செயல்பட வேண்டியது மிக முக்கியத்துவமுடையதாகும். வெள்ளியன்று 11 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இதன் மூலம் இலங்கைக்குள்ளும் கொரோனா வைரஸ் பரவலானது மிகத் தீவிரமாக அதிகரித்து வருவது தெளிவாகிறது.

தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் பெருமளவானோர் கடந்த நாள்களில் நுவரெலியா மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்றவர்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் நிலை ஏற்படுமாயின் ஒரு தடுப்பூசியையேனும் வழங்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உலக சுகதார ஸ்தாபனம் ஆலோசனை வழங்கியுள்ளது- என்றார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் அமெரிக்கர் இந்தியாவின் - தமிழகத்திற்கு சுற்றுப்பயணம் வந்திருந்தார்.

ஒரு வாடகைக்காரில் பல்வேறு இடங்களையும் சுற்றிப்பார்த்தவர், தன்னோடு வந்திருந்த வழிகாட்டியுடன் அவ்வப்போது பல விடயங்களையும் பேசிக்கொள்வார். ஒரு தடவை அவர்களின் பேச்சு அரசியல் பக்கமும் சென்றது.

அமெரிக்கர் சொன்னார், "நாங்கள் தேர்தல் நேரங்களில் டாக்சியில் பயணம்செய்தால், பயணம் முடிந்து டாக்சியிலிருந்து இறங்கும்போது டாக்சி டிரைவருக்கு மீற்றரிலும் பார்க்க அதிகமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு, எங்களது கட்சிக்கு வாக்களிக்குமாறு டாக்சி டிரைவரிடம் கோரிக்கை விடுப்போம்", என்று.

அதற்கு இந்த தமிழக சுற்றுலா வழிகாட்டி சொன்னார். "நாங்கள் அப்படியல்ல, டாக்சியை விட்டு இறங்கி, டாக்சி டிரைவரின் முகத்தில் ஒரு குத்துக் குத்திவிட்டு, 'காசா கேட்கிறாய்.... ஒழுங்கா வாக்கைப்போடு என்று எதிர்க்கட்சியின் பெயரைச் சொல்லி விட்டு போவோம்!", என்று.

இந்தப் பத்தியை எழுதத் தொடங்கியபோது, பல சந்தேகங்கள் இருந்தன. இப்போதெல்லாம் பத்திரிகைகளை எடுத்து, செய்திகளின் தலைப்புக்களை மாத்திரமே பார்த்துவிட்டு பத்திரிகையை அப்படியே போட்டுவிட்டுச் செல்வதைத்தான் பார்த்திருக்கின்றோம். உலகம் அவ்வளவு வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இப்படியெல்லாம் பத்திகளை எழுதினால் வாசகர்கள் படிப்பார்களா? என்ற கேள்வி இந்த ஊர்க்குருவியின் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது.

ஆனால, கடந்த வாரம் ஈழநாடு குழுமத்தின் தலைவரைச் சந்தித்த, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஐயா, தெரிவித்த கருத்துக்கள் பற்றி அறிந்தபோது சற்று உற்சாகம் ஏற்பட்டிருக்கின்றது.

"ஈழநாடு படிக்கின்றீர்களா? எப்படியிருக்கின்றது?", என்று ஈழநாடு குழுமத் தலைவர் கேட்டதற்கு, "நன்றாக இருக்கின்றது" என்றவர், "பத்திரிகையை எடுத்தவுடன், அப்புக்குட்டியையும் ஊர்க்குருவியின் கருத்துக்களையும் தவறாமல் படிக்கின்றேன்", என்றாராம்.

இந்த செய்தி அப்புக்குட்டி அண்ணைக்கும் மகிழ்ச்சியைத் தந்திருக்கும். இந்தத் தகவலை குழுமத் தலைவரிடமிருந்து பெற்ற அன்றே, தமிழ் அரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும் பேசினார்.

நீச்சல்தெரியாத பண்டிதர் கதையிலிருந்து, இந்தப் பத்தியில் வந்த ஒவ்வொரு விசயங்களாக சொல்லிக் கொண்டிருந்தவர், தன்னைப்பற்றி வருகின்ற விமர்சனங்களுக்கும் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அண்மையில் தனது வீட்டில் சுமந்திரனுக்கு விருந்தளித்தது பற்றி வந்த செய்திகள் குறித்தும் குறிப்பிட்டார். தந்தை செல்வாவின் நினைவுதின வைபவத்திற்கு நினைவுரையாற்ற வந்திருந்த ஜெகான் பெரேராவை தனது வீட்டுக்கு இரவு உணவுக்கு வருமாறு தான் அழைத்தபோது, சுமந்திரன், தானே அவரை தனது வாகனத்தில் அழைத்து வருகிறேன் என்று கூறினாராம்.

இரவு உணவுக்கு ஒருவரை அழைக்கின்றபோது, நானும் அவருடன் வருகின்றேன் என்று இன்னுமொருவர், அதுவும் நமது கட்சிக்காரர் சொல்கின்றபோது இல்லை நீங்கள் வர வேண்டாம் என்று சொல்வது நமது பண்பாடா? நல்லது நீங்களும் வாருங்கள் என்றுதானே சொல்லவேண்டும்...' என்றவர்.

இவ்வாறு ஜெகான் பெரேராவுக்கு தான் இரவு உணவு வழங்கியபின்னர், சுமந்திரனுக்கு விருந்து வைத்த மாவை என்று செய்தி போடுகிறார்கள் என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

தேர்தல் காலங்களில் விருப்பு வாக்குகளுக்காக வேட்பாளர்கள் ஒருவரையொருவர் புறக்கணிப்பதும், ஏன் தேவையென்றால் அவர்களைப் பற்றி அவதூறு பரப்புவதும் நமது நாட்டில் வழக்கமாகவே மாறிவிட்டது. ஆனால், எந்த வேட்பாளரும் கட்சித் தலைவரை புறந்தள்ளி தமது பிரசாரங்களை செய்வதில்லை.

ஆனால், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுமந்திரன் - சிறிதரன் ஓர் அணியாகவும் மற்றையவர்கள் தனித்தனியாகவுமே பிரசாரத்தை நடத்தினார்கள். புளொட் வேட்பாளர்கள் இருவரும் ஒருமித்து பிரசாரம் செய்தது வேறு சங்கதி.

தேர்தலில் தமிழ் அரசுக்கட்சித் தலைவர் மாவை தோல்வி அடைந்த பின்னர், கட்சியின் தோல்விக்கு மாவையே பொறுப்பென்று அவசரம் அவசரமாக சுமந்திரன் அறிவித்ததும், தலைமைப் பதவியை ஏற்கத் தான் தயார் என்று சிறிதரன் அறிவித்தமையும் கட்சிக்குள் இரு பிரிவினர் இருப்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. சுமந்திரன் அணியிலுள்ள சிறிதரன் மாவையோடு நெருக்கமாக முயற்சிக்கிறார் என்று அவ்வப்போது செய்திகள் வருவதையும் காணமுடிகின்றது.

சுமந்திரன் மாவையோடு சேர்வதையோ, அல்லது மாவை சிறிதரனோடு நட்பாவதையோ யாரோ விரும்பவில்லைப்போலும்.

தமிழ்நாட்டு வழிகாட்டிசொன்னதுபோல, தமிழ்நாட்டு அரசியல் பாணியில் செய்கின்ற அரசியல் பிரசாரத்தை நம்மவர்களும் பின்பற்றத் தொடங்கிவிட்டார்களோ?

**- ஊர்க்குருவி.**

கொரோனா பரவல் தீவிரம்

# மக்கள் மீது பழி போடுவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது

## நிரோஷன் பெரேரா எதிர்ப்பு



கொழும்பு, மே 02

கொரோனா வைரஸ் பரவலை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி விட்டோம் என்று உலக நாடுகளுக்கு காண்பிப்பதற்காக அரசாங்கம் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை குறைத்தது.

இதன் காரணமாகவே கடந்த சில வாரங்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவாகக் காணப்பட்டது. எனவே, தற்போது ஏற்பட்டுள்ள நிலைக்கு மக்கள் தான் காரணம் எனக்கூறி அவர்கள் மீது பழி போடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா சுனாமிக்கு அரசாங்கமே பொறுப்பு. ஆரம்பத்திலேயே தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் தற்போது இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்காது.

நாடு முகங்கொடுத்துள்ள அபாய நிலைமையை மக்களுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

கடந்த காலங்களில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளதாக காண்பிப்பதற்காகவே பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவும் குறைக்கப்பட்டதாக தகவல்கள் கிடைத்தன.

இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடாமல், எதிர்காலத்தில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்ப்பதற்கும், தீவிர சிகிச்சைப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மக்களின் உயிரை ஆபத்துக்குள்ளாக்க வேண்டாம். முறையான வழிமுறைகளினூடாக பொருளாதாரத்தை மேம்படுத்தி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சீனாவிடம் கடன் பெறுவதன் மூலம் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் எண்ணுவது தவறாகும். கடன் பெறுவதன் மூலம் மேலும் மேலும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியே ஏற்படும் - என்றார். (எ)

# கொரோனா தீவிரம்: வார இறுதி நாள்களில் அதிகளவு அவதானத்துடன் செயல்படுங்கள்

## மக்களுக்கு பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்து

கொழும்பு, மே 01

கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவலடைந்து வருகின்ற நிலையில் வார இறுதி நாள்களில் மிகவும் கவனத்துடன் செயல்படுமாறும், சுகாதார சட்ட விதிகளை முறையாகப் பின்பற்றுமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவலடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலையில், பொதுமக்கள் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

சனி, ஞாயிறு வார இறுதி விடுமுறை தினங்களாகும். இந்தக் காலப்பகுதியில் மேலும் அவதானத்துடன் செயல்பட வேண்டும். ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக் கொள்வதுடன், தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, வீட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் மற்றும் கைகளைச் சுத்தம் செய்து கொள்ளல் போன்ற சுகாதார சட்ட விதிகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு சட்டவிதிகளைப் பின்பற்றாத நபர்கள் தொடர்பில் பொலிஸார் சீருடை, சிவில் உடைகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக் குப் புறம்பாகச் செயல்பட்டதாக அடையாளம் காணப்படும் நபர்கள் அனைவரும் கைது செய்யப் படுவதுடன், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டதாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் 104 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 4,191 பேர் கைது செய்யப்பட்டதுடன், இவர்களுள் 3,000 இற்கும் அதிகமானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது- என்றார். (எ)

# விமான நிலைய கழிவறையில் 26 கிலோ கிராம் தங்கம் மீட்பு

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கழிவறையிலிருந்து 26 கிலோ தங்கத்துடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 31.7 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, விமான நிலைய ஊழியர் ஒருவரும், பயணியொருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கட்டார் விமான நிலையத்திலிருந்து வந்த பயணி ஒருவரால் விமான நிலைய கழிவறையில் வைத்து, விமான நிலைய பராமரிப்பு ஊழியர் ஒருவருக்கு கைமாற்றப்பட்ட தங்கமே கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான விமான நிலைய பணியாளர் தனது உடலில் மறைத்து வைத்து, விமான நிலையத்திலிருந்து வெளியேறத் தயாரானபோது, சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

கல்வி TV CHANNEL-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.05.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, சித்திரை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# ரிஷாத் பதியுதீனின் கைது

பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவருமான ரிஷாத் பதியுதின் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில், அவரது கட்சியின் ஆதரவாளர்களும், எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை தெரிவித்துவருகின்றனர். அவர் கைது செய்யப்பட்டமை பிரச்னையில்லை. ஆனால், கைது செய்யப் பட்ட முறைமையே தவறென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை இனம்காணுதல் என்னுமடிப்படையிலேயே, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனும் அவரது சகோதரரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, சில முஸ்லிம் அரசியல் வாதிகளின் பெயர்களும் வெளியில் வந்தது. அதில் ரிஷாத் பதியுதீனும் ஒருவர்.

அண்மைக்காலமாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விவகாரம் மீளவும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, அரசாங்கம் குற்றவாளிகளை தப்பிக்க விடுவதற்கு முயற்சிப்பதாகவும், இதற்கு பின்னால் பெரும் அரசியல் இருப்பதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டனை தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்துவந்தார். மல்கம் ரஞ்சித்தி ஆண்டகையின் விமர்சனங்கள் அரசாங்கத்தின் மீதான நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்குவதாகவும் அமைந்திருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே முன்னர் சந்தேகத்துக்குரியவர்களாக கருதப்பட்ட ஆசாத்சாலி, அதனைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீனும் அவரது சகோதரரும் தற் போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பதியுதீனின் கைதைத் தொடர்ந்து, அவருக்கும் கேரளாவுக்குமான தொடர்புகளும் தற்போது வெளியாகியிருக்கின்றன. அவரின் தந்தை கேரளாவை பூர்வீகமாகக் கொண்டவரென்றும், அங்குள்ள மதத் தலைவர்களுடன் பதியுதீனுக்கு தொடர்புகள் இருந்ததாகவும் இந்திய புலனாய்வு பணியகத்தையும் கேரளா பொலிஸாரையும் மேற்கோள் காட்டி இந்திய ஊடங்கங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. பதியுதீனுக்கும் கேரள மதக் குழுக்களுக்குமிடையிலான தொடர்புகள் இது வரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், 2009இல் பதியூதின் கேரளாவுக்கு சென்று வந்திருக்கின்றார். அதேபோன்று, 2013இல் சென்னைக்கு சென்றிருந்தபோது அவரை, கேரளாவின் மதத் தலைவர்கள் சந்தித்திருக்கின்றனர். இவ்வாறான தகவல்களின் அடிப்படையில் அவருக்கும் கேரளாவிற்குமான தொடர்புகளை தாம் ஆராய்ந்துவருவதாகவும் இந்திய புலனாய்வு பணியகம் தெரிவித்திருக்கின்றது.

2016 இல், ஐந்து இளம் முஸ்லிம் குடும்பங்கள் கேரளாவிலிருந்து காணாமல் போயிருக்கின்றன. முதல்கட்ட விசாரணைகளின்போது, அவர்கள் சிரியாவை தளமாகக்கொண்டிருந்த, சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்து கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது,

இந்த பின்புலத்தில் ரிஷாத் பதியுதீனின் கேரள தொடர்பிற்கும் குறித்த விடயங்களுக்கும் ஏதாவது தொடர்பிருக்கின்றதா என்பதை ஆராயவுள்ளதாகவும் இந்திய புலனாய்வு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, இந்திய ஊடங்கள் செய்திவெளியிட்டிருக்கின்றன.

இந்த விடயங்களில் தமிழ் அரசியல் தரப்புக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் கருத்துக்களை வெளிப்படுத்தவேண்டும். ஜனநாயக விழுமியங்களுக்காக குரல் கொடுப்பது அவசியம்தான் எனினும், பிராந்திய மற்றும் சர்வதேச பயங்கரவாத நிகழ்ச்சிநிரலுடன் தொடர்புடைய விவகாரங்களில் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். தேவையற்ற வகையில் தமிழ் மக்களுக்கு புதிய நெருக்கடிகளை ஏற்படுத்திவிடக்கூடாது.

# இலங்கையில் தடுப்பூசி கொள்வனவுக்கு உலக வங்கி 1600 கோடி ரூபா நிதி உதவி




*நியாயமான கோவிட்-19 தடுப்பூசிகளை அணுகவும் விநியோகிக்கவும் மற்றும் நாட்டின் தடுப்பூசி முறை மற்றும் தொற்றுநோய்ப் பிரதிபலிப்பை வலுப்படுத்தவும் இலங்கைக்கு உதவுவதற்காக 80.5 மில்லியன் டொலர் (1600 கோடி இலங்கை ரூபா) மேலதிக நிதியுதவியை வழங்குவதற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.*

*இந்த மேலதிக நிதியானது உலக வங்கியால் 2020 ஏப்ரல மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட 217.56 மில்லியன் டொலர் இலங்கை கோவிட் -19 அவசரகால பிரதிபலிப்பு மற்றும் தொற்றுநோய் தயார்நிலைச் செயல்திட்டத்தைக் கட்டியெழுப்புகின்றது.*

*இந்த புதிய நிதி ஏறத்தாழ 4 மில்லியன் மக்களை (இலங்கையின் மக்கள் தொகையில் 18 சதவீதம்) உள்ளடக்கிய தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய உதவும்.*

*அதற்கு மேலதிகமாக, இலங்கையின் மக்கள்தொகையில் 20 சதவீதத்திற்குப் பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் வாய்ந்த தடுப்பூசிகளை பயன்படுத்துவதற்கான செலவுகளை அதன் மக்கள்தொகையில் குறைந்தது 60 சதவீதத்திற்காவது தடுப்பூசி வழங்கும் இலக்கை பூர்த்தி செய்யும்.*

*இந்த மேலதிக நிதியானது சுகாதார அமைச்சின் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டத்தை செயல்படுத்த உதவும்.*

*‘இலங்கை தனது சோதனை, தடமறிதல் மற்றும் சிகிச்சை வழங்கல் தொற்று நோய் முகாமைத்துவ மூலோபாயத்தை செயல்படுத்துவதில் மீளெழுச்சியை வெளிப்படுத்தியுள்ளது. இது அதன் நன்கு நிறுவப்பட்ட பொது சுகாதார முறையில் தங்கியுள்ளது’ என்று மாலைத்தீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கி வதிவிடப் பணிப்பாளர் பாரிஸ் எச். ஹதாத்-செர்வோஸ் கூறினார்.*

*‘தொற்றுநோயால் தூண்டப்பட்ட தாக்கங்களிலிருந்து மீளுவதற்கு, மேம்பட்ட தடுப்பூசித் திட்டங்கள் மற்றும் நோய் தீர்க்கும் மற்றும் நோய்த் தடுப்பு சுகாதார பராமரிப்பு மூலம் அதன் மக்களைப் பாதுகாப்பதற்கு அதன் சுகாதார அமைப்பை மேலும் வலுப்படுத்தவும் சித்தப்படுத்தவும் இலங்கைக்கு நிலையான நிதி வழிமுறைகள் தேவை’ என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*தொற்றுநோய்களின் விளைவுகளை குறைப்பதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்காக அதன் தற்போதைய முதலீட்டுப் பரப்பெல்லையில் பெரும் பகுதியை நோக்கம் மாற்றிப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையில் கோவிட்-19 பரவலுக்கு உலக வங்கி பிரதிபலிப்புச் செய்தது. முக்கியமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), மருத்துவப் பொருட்கள் மற்றும் பி.சி.ஆர். சோதனைகளை வழங்குதல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தற்காலிக பண உதவி வழங்குதல், தனிமைப்படுத்தல் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் ஆய்வக திறனை வலுப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் தொடர்பு தடமறிதல் நடவடிக்கைகளை மேம்படுத்த சமூக சுகாதார அதிகாரிகளுக்கான ஆதரவை மேம்படுத்துதல், இடர் தொடர்பாடல் நடவடிக்கைகள் மற்றும் கோவிட்-19 இன் தாக்கத்துடன் தொடர்புடைய மனநல சுகாதார சேவைகள் ஆகியன உலக வங்கியால் ஆதரிக்கப்படும் சில முயற்சிகளாகும்.*

*இலங்கைக்கான இந்த நிதியுதவிக்கு மேலதிகமாக, கடந்த மாதம், உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சபையானது கோவிட்-19 தடுப்பூசி முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு மொத்தம் 688 மில்லியன் டொலர்களை வழங்க ஒப்புதல் அளித்தது.*


*நிதியுதவிக்கு மேலதிகமாக, நியாயமான மற்றும் சமமான தடுப்பூசி உத்திகளை வடிவமைத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களில் தெற்காசியாவில் உள்ள நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் அறிவு பகிர்வு செயலமர்வுகளையும் வங்கி வழங்குகிறது.*

*அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான நிதி மற்றும் அறிவின் மிகப்பெரிய மூலங்களில் ஒன்றாகிய உலக வங்கி, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு கோவிட்-19 இன் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களுக்கு பதிலளிக்க உதவும் பரந்த, விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

*குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு கோவிட்-19 தடுப்பூசிகள், சோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வாங்கவும் விநியோகிக்கவும் மற்றும் தடுப்பூசி முறைகளை வலுப்படுத்தவும் இது 12 பில்லியன் டொலர்களை உள்ளடக்கியது.*

*100 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுகாதார அமைப்புகளை வலுப்படுத்தவும், ஏழ்மையான குடும்பங்களுக்கு ஆதரவளிக்கவும், கடுமையாக பாதிக்கப்படுபவர்களுக்கு வாழ்வாதாரங்களையும் வேலைகளையும் பராமரிக்க ஆதரவான நிலைமைகளை உருவாக்கவும் உதவும் பரந்த உலக வங்கிக் குழு கோவிட்-19 பிரதிபலிப்பை இந்த நிதி கட்டியெழுப்புகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
விரும்பிய விஷயம் ஒன்று நல்ல முறையில் நிறைவேறும். நேற்றைக்கு ஏற்பட்ட கவலைகள் தீர்ந்து நிம்மதி மீளும். வெளிநாட்டிலிருந்து வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும்.

**இடபம்**
பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்து வெல்வீர்கள். உங்கள் சிரமங்களுக்கு நீங்களே காரணமாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பிறர் உங்களை புரிந்து கொள்ளவில்லை என்று புலம்ப வேண்டாம்.

**மிதுனம்**
பெண்கள் மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். நட்பால் ஆதாயம் உண்டு. பயங்கள் தீர்ந்து நிம்மதி வரும். சுற்றியிருப்பவர்களில் நல்லவர், தீயவர்களைக் கண்டறிவீர்கள்.

**கடகம்**
வேண்டியவரின் நீண்ட கால விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களில் வேற்று மதத்தவர் ஒருவர் நன்மை செய்வார்கள். பணியிடத்தில் பழைய பாணியை மாற்றி வெற்றி பெறுவீர்கள்.

**சிம்மம்**
ஆதரவாக இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. புகழ் கூடும். உங்கள் செயல்பாடுகளில் கொஞ்சம் சிறிய மாற்றத்தை செய்வீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**
உங்களால் பயனடைந்தவர்கள் இன்று உதவி செய்வார்கள். உங்களின் திறமை ஒன்று வெளிப்படும். முயற்சியால் முன்னேறுவீர்கள். எதிர்பாராத வேலைகள் முடியும். சகோதரிகள் உதவுவர்.

**துலாம்**
பழைய கடனைத் தீர்க்க நல்லதொரு வழியை கண்டறிவீர்கள். நற்செயல்கள் செய்வீர்கள். பெரியவர்களின் வாழ்த்தைப் பெறுவீர்கள். பழைய கடனைப்பற்றி யோசித்துத் தீர்வு காண்பீர்கள்.

**விருட்சிகம்**
காணொலியின் மூலம் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தனிப்பட்ட வாழ்வில் பிரச்னை ஒன்றிற்குத் தீர்வு காண்பீர்கள். பணியில் ஏற்படும் ஈடுபாட்டால் நன்மை கிட்டும். நிம்மதி வரும்.

**தனுசு**
பணியாளர்கள் பாராட்டப்படுவீர்கள். தாமதங்கள் இருக்கும். மனம் விட்டுப்பேசும் நட்புடன் இனிதாகப் பொழுது போகும். நண்பர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும்.

**மகரம்**
அனுசரிக்கும் தன்மை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பழி ஏற்படுத்தக்கூடிய செயல்களில் ஈடுபடாதீர்கள். புகழ் பெறுவீர்கள். அன்பால் மற்றவர்களை வெல்வீர்கள்.

**கும்பம்**
முக்கியமான நேரத்தில் விளையாட்டுத்தனமான செயல் வேண்டாம். பெரிய மனிதர்களிடம் கெத்து காட்டி பிரச்னையில் மாட்டாதீர்கள். உங்களின் முன் கால உழைப்பிற்கு இன்று அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்**
சகாக்களின் கேலிப் பேச்சுகளைப் பொருட்படுத்த வேண்டாம். மகிழ்ச்சியான நாள். யாரை நம்புவது என்கிற சந்தேகம் தீரும். புதிய கலையை கற்பீர்கள். வாகனம் வாங்குவது பற்றி யோசிப்பீர்கள்.

# ஒட்சிசன் தயாரிப்பு முறைகளை கூகுளில் தேடுகின்ற இந்தியர்கள்

## வீடுகளில் முயற்சிப்பதால் ஆபத்து



மருத்துவ ஒட்சிசஜனை மக்கள் வீடுகளில் தயாரிக்க முயற்சிப்பது ஆபத்தானது என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

இந்தியாவில் மருத்துவ ஒட்சிசன் வாயுவு க்கு ஏற்பட்டிருக்கின்ற பெரும்தட்டுப்பாட்டினால் உயிர்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. கறுப்புச் சந்தையிலும் வாங்க முடியாத பொருளாக ஒக்சிஜன் மாறியுள்ளது.

இதனால் தங்கள் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக பலரும் தாங்களாகவே ஒட்சிசனைத் தயாரிக்கும் பரீட்சையில் இறங்கி உள்ளனர். இலகுவாக ஒட்சிசன் தயாரிக்கும் முறை என்று விளக்குகின்ற வீடியோக்கள் சமூகவலைத் தளங்களில் வைரலாகப் பரவிவருகின்றன என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

'கூகுள்' தேடு தளங்களில் "வீட்டில் ஒக்சிஜன் தயாரிப்பது எப்படி" ("how to make oxygen at home") எனத் தேடுவோரின் எண்ணிக்கை சடுதியாக மிகவும் அதிகரித்திருக்கிறது என்று 'ரொய்ட்டர் இந்தியா' (Reuters) செய்திச் சேவை தெரிவித்திருக்கிறது. ஒக்சிஜன் தயாரிப்பு முறைகளை விளக்குகின்ற யூரியூப் வீடியோக்களும் (YouTube videos) புதிதாகப் பல மில்லியன் பார்வைகளைப் பெற்றுள்ளன என்று கூறப்படுகிறது.

"செறிவூட்டிகள் (concen trators) மூலமாக மருத்துவ ஒட்சிசனைத் தயாரிப்பதற்கு என்று விஞ்ஞான பூர்வமான முறைகள் உள்ளன. மாறாக வேறு வழி முறைகளில் ஒட்சிசன் வாயுவைத் தயாரிக்க வீடுகளில் முயற்சிப்பது உயிராபத்தான வெடிப்புகள் மற்றும் நச்சு வாயு ஆபத்துகளை ஏற்படுத்தி விடலாம் " இந்திய மருத்துவ சங்கத்தின் தென்னிந்திய செயலாளர் ஏ. ரவிக்குமார் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய தகவ லில் இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளார் வீடுகளில் ஒட்சிசன் வாயு தயாரிப்பது "பரீட்சிக்கப்படாத, நம்பமுடியாத வழி முறை" என்று சென்னை தொற்றுநோயியல்நிலையத்தைச் சேர்ந்த அறிவியலாளர் தருண் பட்நாஹர் (Tarun Bhatnagar) தெரிவித்தி ருக்கிறார்.

இதேவேளை -

நோயாளியின் உடலில் ஒட்சிசன் அளவை சமநிலைக்கு உள்ளாக்கும் ஹோமியோபதி மருந்து என்ற பெயரில் சமூகவலைத் தளங்களில் தவறான முறையில் மருந்துகள் பற்றிப் பரப்பப்படும் தகவல் கள் குறித்து இந்திய அரசு மக்களை எச்சரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கடைசியாக வெளியாகிய ஒரு நாள் தொற்று எண்ணிக்கை உலகில் இதுவரை எங்கும் பதிவாகி இருக்காத அளவாக நான்கு லட்சங்களைத் தாண்டி உள்ளது.

# உண்மையான தொற்று எண்ணிக்கை அதிகம்!

## காலம்பிந்திய முடிவுகளே வெளியிடப்படுகின்றன
## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 02

காலம்பிந்திய கொரோனா பரிசோதனை முடிவுகளே தற்போது வெளியிடப்படுகின்றன என்றும், உண்மையான தொற்று எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்பதாலேயே, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தொடர்பான ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றது என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று நாட்களுக்கு முன்பு நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளே தற்போது வெளியிடப்படு கின்றது என இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் கொரோனா பரவல் குறித்த உண்மையான நிலைவரத்தை அறிந்துகொள்ள முடியாதுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதை விரைவுபடுத்துவது முக்கியமானது எனச் சுட்டிக் காட்டிய அவர்,

தற்போது வெளி யிடப்படும் தினசரி கொரோனாத் தொற்று எண்ணிக்கைகளை விட நாட்டில் அதிகமான தொற்றாளர் கள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பொது இடங்களில் மக்கள் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# 24 மணி நேரத்துக்குள் இறுதிச்சடங்கு 25 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்

கொழும்பு, மே. 02

கொரோனா வைரஸ் தொற்று அல்லாமல் இதர காரணங்களால் உயிரிழப்பவர்களுக்கான இறுதிக்கிரியைகளையும் 24 மணிநேரத்துக் குள் நடத்தி முடிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான வழிகாட்டல் அறிக்கையும் வெளியிடப்பட்டுள் ளது.

இறுதிக்கிரியைகளில் 25 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் வேகமாக பரவிவரும் சூழ்நிலையில், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை உட்பட சில நாட்டவர் சிங்கப்பூருக்குள் நுழையத் தடை

கொழும்பு, மே. 02

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் இருந்து சிங்கப்பூருக்கு வருகைத் தருவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தற்காலிகமாக தடை விதித்துள்ளது.

அதன்படி இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வருகைத் தரும் பயணிகளுக்கே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிங்கப்பூரில் உள்ள கொவிட் 19 தொடர்பான அமைச்சின்செயலணியால்குறித்த தடை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த தீர்மானம் இன்று தொடக்கம் அமுல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அடுத்த வாரம் எம்.பியாக ரணில் சத்தியபிரமாணம்?

## தலைமைப் பதவியிலும் நீடிப்பார்

கொழும்பு, மே. 02



**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியில் தற்போதைக்கு மாற்றம் வராது என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனவே, ரணில் விக்கிரமசிங்க வெகுவிரைவில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வார் என தெரிய வருகின்றது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அந்த மாநாட்டின்போது கட்சியில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

பிரதித் தலைவராக செயற்படும் ருவான் விஜேவர்தனவின் செயற்பாடுகளில் திருப்தி இருக்கின்றதென கட்சி உறுப்பினர்கள் கருதும் பட்சத்தில் 2022 ஆம் ஆண்டு மாநாட்டின் போது அவரிடம் கட்சித் தலைவர் பதவி ஒப்படைக்கப் படலாம் என எதிர்ப்பார்க்கப் படுகின்றது.

அவ்வாறு இல்லாவிட்டால் பிறிதொரு நபரிடம் தலைமைப் பதவி கையளிக்கப்படலாம் என நம்பப்படுகின்றது.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கிய உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களின் பதவிகளை பறித்து, புதியவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையில் ஐ.தே.க. சட்டக் குழு ஈடுபட்டுவரு கின்றது.

# சுகாதார நடைமுறைகளை பேணாத உணவகம் பூட்டு

## வவுனியாவில் ஐந்து பேர் கைது

வவுனியா, மே. 02

சுகாதார நடைமுறைகளுக்கு ஒத்துழைக்காது செயற்பட்டு வந்த உணவகத்தை தனிமைப் படுத்தியதுடன், கடமைக்கு இடையூறாக செயற்பட்ட குற்றச்சாட்டில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா கொறவப்பொத்தானை வீதி பள்ளிவாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ள உணவம் ஒன்று சுகாதாரப் பிரிவினரால் நேற்று தனிமைப் படுத்தப்பட்டதுடன், சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் பணிபுரிபவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுப்பதற்கும், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவும் சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு வருமாறு கடந்த இரு தினங்களுக்கு முன்பாக பணிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த உணவகத்தில் பணிபுரியும் சிலர் சுகாதார வைத்திய அலுவலகத்துக்கு சமூகமளிக்கவில்லை. இந்நிலையில் நேற்றைய தினம் சுகாதார பரிசோதகர்களால் குறித்த உணவகம் தனிமைப்படுத்தப் பட்டது.

இதேவேளை, தனிமைப் படுத்தல் செயற்பாட்டை முன்னெடுக்கச் சென்ற சுகாதாரப் பரிசோதகர்களுடன் குறித்த உணவகத்தின் ஊழியர்கள் சிலர் முரண்பட்டிருந்தனர்.

இதனையடுத்து சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்து ஐந்து பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ரஷ்யாவிலிருந்து விமானக் கொள்வனவுக்கு அரசாங்கம் இப்போது அவசரப்படுவது ஏன்?

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கேள்வி

கொத்மலை,மே 02



நாட்டு மக்கள் கொரோனா வைரஸ் தொற்றால் அவதிப் படும் நிலையில் அரசாங்கம் ரஷ்யாவி லிருந்து விமானங் களைக் கொள்வனவு செய்ய அவசரப்படுகின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதா கிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

நுவரெலியா - கொத்மலை ரம்பொட ஆஞ்சி நேயர் ஆலயத்தில் மே தினத்தை முன்னிட்டு சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி நேற்றுக் காலை இடம்பெற்ற விஷேட வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் கொரோனா தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் போது அரசாங்கம் ரஷ்யாவிலி ருந்து 4 ஹெலிகொப்டர்களை அதிக பணம் கொடுத்து கொள்வனவு செய்ய முயற்சிக்கின்றது. எனவே, முதலில் மக்களுக்குத் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதுதொடர்பில் அக்கறை செலுத்தாமல் விமானக் கொள்வனவு குறித்து கவனம் செலுத்துகின்றனர். இதனை அநாவசிய செலவாகக் கருதாவிடினும் தற்போதைய நிலையில் அதற்கு முன்னுரிமை வழங்குவது உசிதமற்றது.

ஆகவே, தேவையானதுக்கு முதலிடம் கொடுத்து செயல்பட வேண்டும். எனினும் அரசாங்கம் இவ்வாறு திட்டமிட்டு செயல்படுவதால் கொரோனா தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது கொழும்பு துறைமுக நகர திட்டம் தொடர்பான விவாதத்தை ஒரே நாளில் நடத்தி அதை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

எதிர்க்கட்சிகளைப் புறக்கணித்து இவ்வாறு ஜனநாயக விரோத செயல்பாட்டில் இறங்கியுள் ளது. இது புரியாத புதிராகும். இருபதாவது திருத்தத்தை ஆதரித்து ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்களை வழங்கிய சிறுபான்மை உறுப்பினர்களின் நிலைமை கவலைக் கிடமாகவுள்ளது - என்றார். (எ)

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு

கொழும்பு, மே. 02

சந்தைகளில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நுகர்வோர் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாட்டின் பல பாகங்களில் இருந்து சுமார் 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் சேவை அதிகார சபையின் கட்டளையை மீறி, லிற்றோ நிறுவனத்தினால் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனிற்கு பதிலாக, 18 லீற்றர் அடங்கிய சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அந்த சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைகளில் இருந்து உடனடியாக அகற்றுமாறு நுகர்வோர் சேவை அதிகார சபை லிற்றோ நிறுவனத்திற்கு அறிவித்திருந்தது.

எனினும், 12. 5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனிற்கு பதிலாக, 18 லீற்றர் நிறைகொண்ட எரிவாயு கொள்கலன்களே சந்தைகளில் இருப்பதாக நுகர்வோரும், விற்பனை முகவர்களும் தெரிவித்துள்ளனர்.

# ஏப்ரல் மாதத்தில் மட்டும் 15,440 பேருக்கு தொற்று!

## 110 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 02

இலங்கையில் ஏப்ரல் மாதத்தில் 15,440 கொரோனா தொற்று நோயாயர்கள் உறுதி செய்யப்பட்டதுடன், 110 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இந்த மாதத்தின் மொத்த தொற்று நோயாளர் தொகையில் 6,741 வழக்குகள் ஏப்ரல் கடைசி ஐந்து நாட்களில் பதிவாகியுள்ளன.

இது மாதத்தில் அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நோயாளர் தொகையில் 43 வீதமாகும். மாதத்தின் இறுதி 5 நாட்களில் தினசரி சராசரி 1,348 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னொரு போதும் இல்லாத வகையில் தொற்று நோயின் பெரும் எழுச்சியாக இது அமைந்துள்ளது.

நாட்டில் இதுவரை இல்லாதவாறு 11,504 தொற்று நோயாளர்கள் தற்போது சிகிச்சையில் உள்ளனர்.

# தனியார் வைத்தியசாலை ஊழியருக்கு கொரோனா

கொழும்பு, மே. 02

வவுனியாவில் தனியார் வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு கோரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில் பல்வேறு பகுதிகளில் எழுமாறான வகையில் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள சில வியாபார நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பலரிடம் பெறப்பட்டிருந்தது.

அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப் பெற்றது. அந்த வகையில் வவுனியா வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மருந்துவனையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# யாழ் - கொழும்பு ரயில் சேவையில் மே 7 முதல் படுக்கை ஆசன சேவை

யாழ்ப்பாணம், மே. 02



யாழ். கொழும்பு ரயில் சேவையில் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் படுக்கை ஆசன சேவை ஆரம்பம் என யாழ்ப்பாண ரயில் நிலைய பிரதான அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இரவு நேர தபால் ரயில் சேவையில் குறித்த படுக்கை ஆசன வசதி கொண்ட மேலதிக பெட்டி இணைக்கப்பட்டு சேவை இடம்பெறவுள்ளதாகவும் சேவையைப் பெற விரும்புவோர் ஆசன முற்பதிவுகளை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

தற்போது ரயில் சேவை நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் எவ்வித உண்மையும் இல்லை. கொழும்பிலிருந்து காலை 5.45 மணிக்கு புறப்பட்டு மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து மீண்டும் பிற்பகல் 1.15மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு 1 .37 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்படும் நகர் சேர் கடுகதி ரயில் சேவை மாத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்த சேவை தவிர்ந்த ஏனைய சேவைகள் வழமை போல்தற்போதுள்ள கொரோனா நிலைமைக்கு ஏற்றவாறு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்று வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# விமான நிலையங்கள் விரைவில் மூடப்படுமா?

## தீவிரமாக ஆராய்கின்றது அரசு

கொழும்பு, மே. 02

**வெளிநாடுகளில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸின் ஆபத்தான புதிய திரிபுகள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்கும் நோக்கில் விமான நிலையங்களை மூடுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் இதனை அரசாங்கம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.**

விமான நிலையங்களை மூடுவது குறித்து இதுவரை இறுதி முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என விமான போக்குவரத்து துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எனினும் தென்னாபிரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பரவிவரும் ஆபத்தான புதிய திரிபு வைரஸ்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க விமான நிலையங்களை மூடுமாறு சுகாதார வல்லுநர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட தினசரி தொற்றுநோயாளர்கள் பதிவாகி வருகின்றனர். இதனால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. கொரோனா உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன. இங்கிலாந்தில் பரவிய பி.1.1.7 திரிவு வைரஸ் பரவலே இந்நிலைக்குக் காரணம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில் தற்போது இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவில் வேமாகப் பரவும் புதிய திரிவு வைரஸ்கள் நாட்டுக்குள் நுழையாமல் கட்டுப்படுத்தி வைத்துள்ளோம் என்பது ஆறுதலானது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையங்களை மூடாவிட்டால் தென்னாபிரிக்க மற்றும் இந்தியாவில் பரவும் ஆபத்தான திரிபு கொரோனா நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது. இந்த வைரஸ்களும் பரவினால் நாடு மிக மோசமான நெருக்கடிக்கு முகம்கொடுக்கும். இதனைத்தடுக்க வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருவதையும் இலங்கையர்கள் நாடு திரும்புவதையும் தடுக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் அரசை வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்வாறான நிலையிலேயே விமான நிலையங்களை மூடுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே. 02

வெலிசறை விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் ஊழியர்கள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் நேற்று பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது 140 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சில முடிவுகள் கிடைக்கப் பெறவுள்ளதாவும், தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட விற்பனை நிலையங்களை மூட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போக்குவரத்து சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன

கொழும்பு, மே. 02

நாடு முழுவதும் கொவிட் பரவல் அதிகரித்துள்ள காரணத்தினால் பொதுபோக்குவரத்து சேவைகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கொவிட் சட்டத்தை கடுமையாக அமுலாக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய கொவிட் சட்டங்களை மீறி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராக தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் விதிகளுக்கமைய பஸ் ஒன்றில் ஏற்றிச் செல்லக் கூடிய பயணிகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கான விசேட சோதனை நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புள்ள ஐவர் வடக்கில் கைது

முல்லைத்தீவு, மே. 02

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 8 கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 பேர் புதுக்குடியிருப்பு பொலிஸா ரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களிடம் இருந்து சுமார் 50 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, இவர்களால் சுமார் 150 பவுண் வரையான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது

இந்நிலையில், சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இடம் மாறிய சடலம்

கொழும்பு, மே. 02

உயிரிழந்த இரண்டு பெண்களின் சடலங்கள் இடம் மாறிய சம்பவமொன்று நிக்கவரெட்டிய ஆதார மருத்துவமனையில் இடம்பெற்றமையால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

நிக்கவரெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய பெண்ணொருவரின் சடலமும், மஹவ பிரதேசத்தைச் சேர்ந்த 81 வயதுடைய பெண்ணொருவரின் சடலங்களுமே இவ்வாறு இடம் மாறியுள்ளன.

நிக்கவரெட்டிய பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய பெண்ணின் சடலம் மஹவ பிரதேசத்தில் உள்ள இறந்தவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவர்கள் சடலத்தை தகனம் செய்வதற்காக மயானத்துக்கு கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, நிக்கவரெட்டிய பகுதி பெண்ணின் உறவினர்கள் சடலத்தை பெற்றுக் கொள்ள வந்தபோது, சடலம் மாற்றப்பட்டுள்ள சம்பவம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை உருவானது.

சம்பவம் தொடர்பில் நிக்கவரெட்டியவில் உள்ள உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

சடலம் மாற்றப்பட்டமை தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் முறையான பதிலை வழங்கவில்லை என அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திரையரங்குகள் மூடப்படவேண்டும்

கொழும்பு, மே. 02

புதிய சுகாதார வழிகாட்டிக்கு அமைய திரையரங்குகள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பன மூடப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா அச்சம் அதிகரித்து வருகின்றமை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் இவ்வருடம் மட்டும் 342 கொரோனா தொற்றாளர்கள்!

மன்னார், மே. 02

மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 342 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதாகர் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 359 கொரேனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் 342 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் மாதம் மாத்திரம் 21 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 10 கொரோனா தொற்றாளர்கள் ஒரு வாரத்தில் அடையாளம் காணப்பட்டவர்கள்.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை 5 கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமையினால் மக்கள் பொறுப்புடன் செயல்படுமாறு சுகாதாரத் துறை சார்பாக மக்களிடம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொதுமக்கள் ஒன்று கூடுவதை முக்கியமாக தவிர்க்குமாறும், குறிப்பாக மதஸ்தலங்கள், மரணச் சடங்கு போன்றவற்றில் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

சென்ற முறை போன்று அல்லாது இம்முறை ஒட்சிசன் தேவையான நோயளர்களின் எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளது.

முன்பு இல்லாத வகையில் இம்முறை ஏற்பட்ட கொரோனா தொற்றானது இளைஞர், யுவதிகளையும் அதிக அளவில் தாக்கி வருகின்றமையினால் வைத்தியசாலைகள் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தேவையற்ற பயணங்களையும், தேவையற்ற வகையில் ஒன்று கூடுவதையும் முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்கு கடல் மார்க்கமாக வருகை தந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் குறித்த நடவடிக் கைகளை உடனடியாக நிறுத்தி, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தற்போதைய கொரோனா தொற்றானது காற்றின் மூலம் பரவும் என அடையாளம் காணப்பட்டமையினால் மக்கள் நெருக்கமான இடங்களில் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக முகக்கவசத்தை உரிய முறையில் மூக்கு, வாய் உள்ளடங்களாக அணிய வேண்டும்.

வர்த்தக நிலையங்கள் வியாபார ஸ்தாபனங்கள், தொழில் நிறுவனங்கள் , அரச திணைக்களம் போன்றவற்றில் மக்கள் உரிய முறையில் முகக்கவசத்தை அணிவதன் மூலம் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மக்கள் எதிர் வரும் இரண்டு வார காலப்பகுதிக்கு மிகவும் அவதானமாக செயல் படுமாறும், தேவையற்ற ஒன்று கூடல், பயணங்கள், வெளி மாவட்டங்களுக்கு செல்வதை முற்றாக தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மேலும் மன்னார் மாவட்டம் மற்றும் வடமாகாண மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் உறவை மேற்கொண்டு வரும் நிலையில் அவற்றை நிறுத்தி உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சுகாதார துறை உத்தியோகஸ்தர்களுக்கான 2 ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் 60 வீதமான சுகாதார துறையினருக்கு 2 ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. சில நாள்களில் பூரணப் படுத்தப்படும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3ஆவது அலையில் திணறும் மேல்மாகாணம்:*

# வைத்தியசாலைகள் நிரம்பியதால் வீட்டில் உயிரிழந்த தொற்றாளர்!

கொழும்பு, மே. 02

**மேல் மாகாணத்தில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவம் நிலையில் அங்குள்ள சகல வைத்தியசாலைகளும் நிரம்பி வழிவதால், தொற்றுறுதியான ஒருவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.**

மேல் மாகாணத்தில் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் வைத்திய சாலைகளில் உள்ள கட்டில்கள் அனைத்தும் நோயாளர்களால் நிறைந்துள்ளன என்று மாகாண சுகாதாரத்துறை செயலாளர் காமினி தர்மசேன தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமையில் வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்ட ஒருவர் வைத்தியசாலை யில் இடம் இல்லாததால் வீட் டிலேயே உயிரிழந்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்று வேக மாகப் பரவி வரும் நிலையில், கடந்த இரு நாட்களில் 3 ஆயி ரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்களில் ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்டோர் பேர் மேல் மாகாணத்தில் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.



# வீதியோரத்தில் அபாயகரமான மரங்களை அகற்ற கோரிக்கை!

முல்லைத்தீவு, மே. 02

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமை யில் வீதிக்கு குறுக்காக பாரிய மரம் ஒன்று சரிந்து விழுந்ததில் ஒரு மணித்தியாலம் குறித்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது

முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதி ஓரத்தில் நின்ற பாரிய மரம் ஒன்று திடீரென வீதிக்கு குறுக்காக முறிந்து விழுந்தது.

குறித்த மரம் விழுந்ததில் தெய்வாதீனமாக வீதியில் பய ணம் செய்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

குறித்த சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொதுமக்கள், இளைஞர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள், முள்ளியவளை பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீதியில் வீழ்ந்து கிடந்த மரத்தை அகற் றும் பணியில் ஈடுபட்டனர்

சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் குறித்த மரம் அகற்றப் பட்டு போக்குவரத்து வழ மைக்கு திரும்பியது.

அண்மையில் முல்லைத் தீவில் இவ்வாறு மரம் ஒன்று வீதிக்கு குறுக்காக விழுந்து இருவர் உயிரிழந்தனர்.

குறித்த வீதியில் மரம் முறிந்து விழுந்த பகுதிக்கு அண் மையாகவும் ஏனைய இடங்களி லும் வீதியோரத்தில் அபாயகர மான நிலையில் காணப் படும் மரங்களை உடனடியாக அகற்றி எதிர்காலத்தில் இவ்வா றான அனர்த்தங்கள் இடம் பெறாதிருக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆவன செய்யவேண் டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேலும் சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, மே. 02

கொரோனா வைரஸ் தொற்று விரைவாக அதிகரித்து வருகின் றமையினால் அதிகளவான தொற் றாளர்கள் இனங்காணப் படும் பகுதிகளை உடனடியாக முடக் கும் செயற்பாட்டை அரசாங் கம் மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் கொழும்பு-பிலியந்தல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நாம்பமுனுவ, கொரக்காபிட்டி கிராம சேவகர் பிரிவுகள் தற்போது முதல் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாக இராணுவத் தள பதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

இதேவேளை காலி - அம் பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடஹேன, தல்கஸ்கொட கிராம சேவகர் பிரிவுகள் நேற்று முதல் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதற்கிடையில் அம்பாறை-தெய்யத்தகண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெய்யத்த கண்டி மற்றும் கதிராபுற கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக இராணு வத் தளபதி சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

இதனிடையே இரத்தினபுரி-கலவானை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஹப்புகொட கிராம சேவகர் பிரிவும், தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.






ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பி லுள்ள ஐ.நா அலுவலகத்தில் இடம்பெற்றது.

# சுகாதார விதிமுறைகளை மீறிய 2,023 நிறுவனங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, மே. 02

மேல் மாகாணத்தில் தனி மைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 26 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 3 மணி முதல் 6 மணி வரை மூன்று மணி நேரத்திற்குள் மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக் கையின் போதே அவர்கள் இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

இதற்கமைய 2,320 நிறுவ னங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அதில் 2023 நிறுவனங் கள் தனிமைப்படுத்தல் விதி களை மீறியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சதொச ஊடாக நிவாரணம்

*அமைச்சர் பந்துல அறிவிப்பு*




கொழும்பு, மே 01

கொரோனா வைரஸ் தாக்கத் தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு சதொச விற்பனை நிறுவ னத்தின் ஊடாக நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக இரண்டு வார காலத் துக்கு விற்பனை செய்யப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்:

கொரோனா வைரஸ் தாக் கம் தற்போது சடுதியாக அதி கரித்துள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட் டுள்ள சவால்களை வெற்றி கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளது.

நெருக்கடியான நிலையில் நாட்டு மக்களுக்கு சதொச நிறு வனத்தின் ஊடாக நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. பண்டிகைக் காலத்தில் ஆயிரம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொதி சதொச விற் பனை நிறுவனத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்டது.

இதன் காரணமாக சதொச நிறுவனம் அதிக இலாபம் பெற்றுக்கொண்டது. தற்போது அத்தியாவசிய பொருள்களை உள்ளடக்கிய நிவாரணப் பொதி விநியோகிக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

சம்பா அரிசி ஒரு கிலோ கிராம், நாட்டரிசி ஒரு கிலோ கிராம், கோதுமை மா ஒரு கிலோ கிராம், சிவப்பு பருப்பு ஒரு கிலோ கிராம், நெத்தலி 200 கிராம், சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் நிவாரணப் பொதி யில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் நிவாரணப் பொதி நேற்று தொடக்கம் இரண்டு வார காலத்துக்கு சதொச நிறுவ னத்தின் ஊடாக விற்பனை செய்யப்படும். அத்தியாவசிய பொருள்களின் நிர்ணய விலையை நிலையாகப் பேணும் வகையில் தேசிய உற்பத்தியா ளர்கள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர் களுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இம்மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவுபெறுகிறது. இந்த ஒப்பந்தத்தை நீடிப்பது குறித்து உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப் பட்டுள்ளது- என்றார். (எ)

# குழந்தைகள் மத்தியில் பரவுகிறது புதிய நோய்

கொழும்பு, மே. 02

சிறு குழந்தைகளுக்கு மத்தி யில் தற்போது மிக வேகமாக ஒரு தொற்று நோய் பரவி வருகின்றமையை காண முடி கின்றது என குழந்தைகள் தொடர்பிலான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவிக்கின்றார்.

தோல் நோய் ஒன்றே இவ் வாறு பரவி வருவதை காண முடிகின்றது என அவர் கூறினார்.

இந்த நோய், 6 மாதம் முதல் 5 வயது வரையான குழந்தைக ளுக்கு ஏற்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட் டார்.

காய்ச்சல், உடம்பு வலி, கைகள், கால்கள் மற்றும் வாய் ஆகிய பகுதிகளில் சிவப்பு நிறத்திலான தழும்புகள் ஏற் படுகின்றமை, இந்த நோய்க் கான முதல் கட்ட அறிகுறிகள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோயானது, ஒரு குழந்தையிடமிருந்து மற்று மொரு குழந்தைக்கு தொற் றும் அபாயம் காணப்படுவதா கவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் பெரு நகரங்களை கடந்து சிறு நகரங்களை தாக்கும் கொரோனா!

இந்தியாவை மோசமாக புரட்டிப்போட்டு வரும் கொரோனா வைரஸ் டெல்லி, மும்பை, லக்னௌ, புனே போன்ற பெரிய நகரங்களில் பேரழிவு தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. மருத்துவமனைகள் மற்றும் தகன மைதானங்களில் இடம் கிடைக்காத அளவுக்கு பிரச்னை தீவிரமாகி வருகிறது. பல இடங்களில் இறுதிச்சடங்குகள் கார் நிறுத்துமிடத்தில் நடக்கின்றன.

கடைசியில், இந்த பெருந்தொற்று பல சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கும் விரிவடைந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் கோட்டா மாவட்டத்தில் ராஜேஷ் சோனி கடந்த செவ்வாய்க்கிழமை தனது தந்தையை மருத்துவமனையில் சேர்க்க ஒவ்வொரு மருத்துவமனையாக ஏறி இறங்கினார். இதற்காக அவர் சுமார் எட்டு மணி நேரம் செலவிட்டார். அவசர ஊர்தி கிடைக்காததால், ஒரு பழைய ஓட்டோவில் தனது தந்தையுடன் அலைந்தார்.

ஆனால், மாலை 5 மணியளவில் தந்தையின் நிலைமை மோசம் அடைந்ததால், விரக்தியடைந்த அவர், மருத்துவமனை தேடலை முடித்துக் கொண்டு விதியின் போக்குக்கு எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீடு திரும்பினர் ராஜேஷ் சோனி.

"நான் அவருக்கு வீட்டில் மருந்துகளை தருகிறேன், ஆனால் அவர் உயிர் பிழைப்பார் என்ற நம்பிக்கை குறைநது வருகிறது. நாங்கள் வீதிகளிலேயே இறக்கும் அளவுக்கு நிர்கதியாகியிருக்கிறோம்," என்று ராஜேஷ் கூறினார்.

பல தனியார் மருத்துவமனைகள் கூட இவரது நிலையை அறிந்தபோதும், பரிசோதனை செய்கிறோம்என்ற பேரில்பணத்தை கறந்ததாக இவர் கூறுகிறார். ஆனால், கடைசியில் படுக்கைகள் இல்லாததால் தந்தையை அழைத்துச் செல்லுமாறு இவரிடம் அந்த மருத்துவமனைகள் கூறியுள்ளன.

"நான் ஒரு செல்வந்தர் அல்லன். சம்பாதித்த அனைத்தையும் ஓட்டோ ஓட்டுநருக்கும் மருத்துவமனைகளுக்குமே செலழித்தேன். இப்போது வீட்டிலேயே ஒட்சிசன் சிலிண்டரை வைத்து சிகிச்சை அளிக்க மேலும் பணத்தை சிலரிடம் கடனாக வாங்கவுள்ளேன்," என்கிறார் ராஜேஷ்.

மறுபுறம் இந்தியாவில் கொரோனா பெருந்தொற்றால் மிக மோசமான பாதிப்புக்குள்ளான நகரங்களில் ஒன்றான டில்லியில் இதுபோன்ற கதைகள் வழக்கமாகி வருகின்றன.

இதே போன்ற கதைகளை சுமக்கும் ஐந்து வெவ்வேறு மாநிலங்களில் உள்ள நிலைமையை பிபிசி பார்வையிட்டது. அந்த மாநிலங்களின் நகரங்களில் இருந்து சிறிய நகரங்களுக்கு வைரஸ் எவ்வாறு பரவி வருகிறது என்பதையும் பிபிசி அறிந்தது.

**கோட்டா, ராஜஸ்தான் மாநிலம்**

இந்த நகரிலும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் கடந்த வாரத்தில் மட்டும் 6,000க்கும் அதிகமான கொரோனா பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மேலும் பெருந்தொற்று தொடங்கியதில் இருந்து 264 பேர் இங்கு இறந்துள்ளனர் - ஆனால் அவற்றில் 35% உயிரிழப்பு ஏப்ரல் மாதத்தில் மட்டுமே ஏற்பட்டன.

ஏப்ரல் 7ஆம் தேதிவரை, இங்கு வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை இரட்டிப்பாக்க 72 நாட்கள் வரை ஆனது. ஆனால் இப்போது அது 27 நாட்களிலேயே இரட்டிப்பாகிறது.

இங்குள்ள மருத்துவமனைகளில் அனைத்து ஒட்சிசன் படுக்கைகளிலும் நோயாளிகள் நிரம்பி வழிகிறார்கள். மாவட்டத்தின் 329 தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் இரண்டு மட்டுமே ஏப்ரல் 27ஆம் தேதி காலியாக இருந்தன. நகரத்தின் ஒரு மூத்த பத்திரிகையாளர் பிபிசியிடம் பேசும்போது, "நோயாளிகளை சேர்க்க இடமின்றி இருக்கும் மருத்துவமனைகளின் நிலைமையே, இங்குள்ள நெருக்கடிக்கு எடுத்துக்காட்டு. உண்மையில் இங்கு பாதிப்பு எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது," என்று தெரிவித்தார்.

ஒட்சிசன் மற்றும் ரெம்டெசிவீர், டோசிலிசுமாப் போன்ற மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு உள்ளது. இங்குள்ள பிரபலமான மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர நாடு முழுவதும் உள்ள மாணவர்கள் இங்குள்ள பயிற்சி மையங்களில் சேர ஆர்வம் காட்டுவார்கள்.

இப்போது அந்த மாணவர்கள் பலரும் இங்கிருந்து வெளியேறிவிட்டனர். அதனால், இந்த மாவட்டம் மீதான பார்வை இப்போது வெகுஜன ஊடகங்களிடம் இருந்து விலகியிருக்கிறது.

இங்குள்ள நிலையை கொவிட் சுனாமி என அழைக்கும் உள்ளூர் பத்திரிகையாளர், இங்குள்ள நிலையை சமாளிக்க மருத்துவமனை தயாராக இல்லை என்கிறார். இங்கு வீதிகளில் மக்கள் செத்து மடிவதற்கு முன்பாக கூடுதல் ஒட்சிசன் மற்றும் படுக்கை வசதிகளை செய்து தர வேண்டும்," என்கிறார் அந்த பத்திரிகையாளர்.

**அலகாபாத், உத்தரபிரதேச மாநிலம்**

பிரயாகராஜ் என்றும் அழைக்கப்படும் இந்த நகரில் ஏப்ரல் 20ஆம் திகதிவரை 54,339 கொரோனா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன, ஆனால் அது பின்னர் 21% அதிகரித்தது. கடந்த வாரத்தில் இங்கு புதிதாக 11,318 பாதிப்புகள் கண்டறியப்பட்டன.

கொரோனா வைரஸால் இங்கு ஏற்பட்ட 614 மரணங்களில் 32% ஏப்ரல் மாதத்தில் மட்டுமே நடந்தவை. நகரில் சுகாதார வசதிகள் குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் எதுவும் இல்லை, ஆனால் பிபிசி பேசிய பலரும், நோய்வாய்ப்பட்ட தங்களது உறவினர்களுக்கு ஒரு படுக்கை வசதியைக் கூட கண்டறிய முடியாத நிலையை விவரித்தனர்.

படுக்கை வசதி பற்றாக்குறை குறித்து நகரின் தலைமை மருத்துவ அதிகாரியை தொடர்பு கொள்ள பல முறை பிபிசி முயன்றது. எழுத்துபூர்வமாக அனுப்பிய கேள்விகளுக்கும் அவர் பதில் தரவில்லை.

நகரின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர், தகன மையங்களும் புதைகுழி தோண்டும் பணிகளும் இரவு பகலாக நடந்தன என்று கூறினார்.

மாநில முதலமைச்சரான யோகி ஆதித்யநாத் சமீபத்தில் தமது மாநிலத்தில் மருந்துகள், மருத்துவமனை படுக்கைகள் அல்லது ஒட்சிசன் போன்றவற்றுக்கு பற்றாக்குறை இல்லை என்று கூறினார். ஆனால் அவரது கருத்துக்கும் களத்தில் உள்ள நிலைமைக்கும் இடையிலான வேறுபாடு உள்ளது என்று வல்லுநர்கள் தெரிவித்தனர்.

ஏற்கெனவே ஒட்சிசன், ரெம்டெசிவீர் மருந்து, படுக்கை வசதிகளைக் கேட்டு மக்கள் பலரும் சமூக ஊடகங்கள் வாயிலாக மன்றாடும் காணொளிகளையும் தகவல்களையும் பகிர்ந்து வருகிறார்கள். ஆனால், ஒட்சிசன் பற்றாக்குறை இருப்பதாக "பொய்" கூறும் எந்தவொரு தனியார் மருத்துவமனை மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில முதலமைச்சர் எச்சரித்துள்ளார்.

ஒரு சிறிய தனியார் மருத்துவமனையின் ஊழியர் ஒருவர் பிபிசியிடம் பேசும்போது, ஒட்சிசனுக்கு ஏற்பாடு செய்வது கடினமாகிவிட்டது. ஆனால் இது பற்றி வெளியே கூறினால் தனது வேலை பாதிக்கப்படலாம் என்பதால் அது பற்றி வெளியே பேசுவதில்லை," என்று கூறினார்.

"எந்தவொரு மருத்துவமனையும் ஏன் பற்றாக்குறை இருப்பதாக தவறாக தெரிவிக்க வேண்டும். அதன் அவசியம் ஏன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை," என்று கூறுகிறார் அந்த மருத்துவ ஊழியர்.

உத்தர பிரதேச மாநிலத்தில், ஒட்சிசன் பற்றாக்குறையால் ஏற்படும் இறப்புகள் தொடர்பாக ஊடகங்களிலும் செய்திகள் வந்துள்ளன. உத்தர பிரதேசத்தில் உள்ள பல மாவட்டங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள மருத்துவமனைகள் கூட படுக்கை வசதிகளை வழங்க முடியாத அளவுக்கு நோயாளிகளால் நிரம்பி உள்ளன.

ஆஷீஷ் யாதவின் தந்தை, கான்பூர் மாவட்டத்தில் ஆபத்தான நிலையில் உள்ளார். தனது தந்தைக்கு ஒரு படுக்கை வசதியையோ பரிசோதனை செய்ய ஒரு மருத்துவரையோ கூட அவரால் பெற முடியவில்லை.

"நான் எல்லா இடங்களிலும் கெஞ்சினேன், வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் யாரும் உதவி செய்யவில்லை. விளம்பரம் செய்யப்பட்ட உதவி தொலைபேசி எண்களின் அழைப்பை யாரும் எடுக்கவில்லை" என்று அவர் பிபிசியிடம் கூறினார்.

**கபீர்தாம், சத்தீஸ்கர் மாநிலம்**

கடந்த மார்ச் முதலாம் திகதி, இங்கு கொவிட் -19 பாதிப்பு எதுவும் பதிவாகவில்லை. ஆனால் கடந்த ஏழு நாட்களில் இங்கு கிட்டத்தட்ட 3,000 புதிய பாதிப்புகள் பதிவாகின.

கபிர்தாம் மாவட்ட மருத்துவமனையில் ஏழு வென்டிலேட்டர்கள் உள்ளன. ஆனால் உயிர் காக்கும் கருவிகளை இயக்க பயிற்சி பெற்ற மருத்துவர்களோ ஊழியர்களோ இல்லை. அரசாங்க தரவுகளின்படி, மாவட்ட மருத்துவமனையில் 49 சிறப்பு மருத்துவர்கள் இருக்க வேண்டும், ஆனால் ஏழு பேர் மட்டுமே பணியில் உள்ளனர். செவிலியர்கள் மற்றும் பரிசோதனை கூட தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் இங்கு கடுமையான பற்றாக்குறை உள்ளது.

"உள்ளூர் பத்திரிகையாளர்கள் கூறுகையில், மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளால் நோயாளிகளைக் கையாள முடியவில்லை. ஏனெனில் இங்கு மிகவும் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை தருவதற்கு இங்குள்ள மருத்துவ நிர்வாகம் தயாராக இருக்கவில்லை. சரியான சிகிச்சை கிடைக்காமல் பலரும் உயிரிழந்துள்ளனர்," என்று தெரிவித்தனர்.

**பாகல்பூர் மற்றும் ஔரங்காபாத்**

கிழக்கு மாநிலமான பிகாரில் உள்ள பாகல்பூர் மாவட்டமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 20 முதல் அதன் பாதிப்பு அளவு 26% அதிகமாக இருந்தது. அதே காலகட்டத்தில் இறப்புகளின் எண்ணிக்கை 33மூ அதிகரித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள ஜவாஹர் லால் நேரு மருத்துவ கல்லூரியில் (ஜே.என்.எம்.சி) மட்டுமே ஐ.சி.யூ படுக்கைகள் உள்ளன. அதன் 36 பிரிவுகளும் ஏப்ரல் 28ஆம் திகதி நிரம்பி வழிந்தன. மருத்துவமனையில் உள்ள 350 ஒட்சிசன் படுக்கைகளில் 270க்கும் மேற்பட்டவை நோயாளிகளால் நிரம்பியுள்ளது.

மருத்துவமனையின் மூத்த அதிகாரி ஒருவர் பிபிசியிடம் பேசும்போது, 220 மருத்துவர்களில் 40 பேர் கடந்த 10 நாட்களில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டதாகவும் அதில் நான்கு பேர் இறந்ததாகவும் கூறினார். இது மருத்துவமனையின் அழுத்தத்தை அதிகரித்தது.

மாநிலத்தின் மேற்கில் உள்ள ஔரங்காபாத் மாவட்டமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 5 முதல் இங்கு 5,000க்கும் மேற்பட்ட கொரோனா பாதிப்புகள் இருந்தன. அதே காலகட்டத்தில் ஆறு பேர் இறந்ததாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் சிறிய நகரங்கள் மற்றும் பெரிய நகரங்களில் பரிசோதனை ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதால் உண்மையான பாதிப்பு எண்ணிக்கை இதை விட அதிகமாக இருப்பதாக மாநிலத்தின் மூத்த பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர்.

கொவிட் -19 பரிசோதனை செய்ய முடியாமல் பலர் இறக்கின்றனர். அத்தகைய மரணங்கள் அலுவல்பூர்வ தரவுகளுக்குள் செல்லாது.







( மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணனை தன்னகப்படுத்தும் மற்றுமொரு முனைப்பில் இலங்கை!



இராமாயணத்தில் இராவணனை வட இந்தியர்கள் அரக்கனாக அசுரனாக சித்தரித்தாலும் தமிழர்களால் பெரும் சிவபக்தனான நல்மனம் கொண்ட, வீரம் பொருந்திருந்திய மன்னனாக நோக்கப்படுபவன் இராவணன்.

ஆனால் இலங்கையில் சிங்களவர்களோ இராவணன் தமக்கு சொந்தமான அரசன், சிங்களவர்களின் வீரத்திற்கும் விவேகத்திற்குமான வரலாற்றுச் சான்று என்ற வகையில் உரிமைகோரல்கள், உருவகப்படுத்தல்கள் இடம்பெற்றுவருகின்றன.

இலங்கைத் தொலைக்காட்சிகளில் இராவணனை சிங்கள மன்னாக சித்தரிக்கும் தொலைக்காட்சித் தொடர்களும் ஒளிபரப்பாகின்றன.

இந்த நிலையில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இராவண மன்னன் பற்றி ஆராய்வதற்கான முனைப்பில் உத்தியோகபூர்வமாக இறங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண ‘ இராவண மன்னனை பற்றி முறைப்படி ஆராயும் கற்கையை’ மேற்கொள்வது குறித்து பாராளுமன்றத்தில் தனி நபர் பிரேரணையொன்றை முன்வைத்து அதற்கான அனுமதியைக் கோரியிருந்தார்.

இராவண மன்னனைப் பற்றிய கற்கையை நிபுணர் குழுவொன்றினால் முன்னெடுப்பதன் வாயிலாக இலங்கை வரலாற்றின் மறைக்கப்பட்ட ஒரு காலப்பகுதியைப் பற்றிய தகவல்களை வெளிக்கொண்டுவருவதற்கும்

இந்த நாட்டை மேம்படுத்துவதற்காக அவர் கொண்டிருந்த அறிவு தொடர்பாக கண்டறிவதற்குமான முயற்சியை எடுக்க முடியும் என அந்த தனிநபர் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இராவணன் பற்றிய ஆய்வு களை மேற்கொள்வது தொடர்பாக உத்தியோகபூர்வ மாக பத்திரிகைகளிலும் விளம்பரங்களைப் பிரசுரித்திருந்தது.

‘உலகில் முதன்முதலில் விமானத்தை இயக்கியவன் எங்கள் பேரரசன் ராவணன் தான்’ என்று கூறியுள்ள இலங்கை அரசு இதை நிரூபிக்க மிகப்பெரிய ஆய்வில் களமிறங்கப் போவதாகவும் அறிவித்து உள்ளது.

இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளு மாறு சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசு இலங்கை மன்னனான இராவணன் மற்றும் நாட்டின் விமான போக்குவரத்து வரலாறு குறித்து விரிவான ஆராய்ச்சி நடத்த விரும்புவதாகவும்

இராவண மன்னன் மற்றும் இப்போது இழந்த வான் வழி பாதைகளில் பண்டைய ஆதிக்கம் குறித்த ஆராய்ச்சி திட்டத்தைச் சிவில் விமான போக்குவரத்து அதிகார



சபை ஆரம்பிக்கவுள்ளது.

5000 ஆண்டுகளுக்கு முன்பு இராவ ணன் விமானத்தில் பறந்து விட்டதா கவும், உலகின் முதல் விமானி என்றும் இலங்கை நம்புகிற நிலையில் பண்டைய காலகட்டத்தில் பறக்கப் பயன் படும் முறைகளைக் கண்டறிய நாடு இப்போது ஆர்வமாக உள்ளது என் றும் தெரிவித்து ஆராய்ச்சியின் முதல் கட்டமாக, இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் பிற வரலாற்று உள்ளடக்கங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளது.

விமானத்தைப் பறக்க விட்ட முதலாவது ஆள் இராவணன் என்பதை நிரூபிக்க அரசாங்கத்திற்கு மறுக்க



முடியாத உண்மைகள் இருப்பதாகவும் இராவணன் ஒரு மேதை, அவர் தான் முதலில் பறந்தார், அவர் ஒரு விமானி யாக இருந்தார் என்றும் விமான போக்கு வரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது ஐதீக கதை அல்ல,இது ஒரு உண்மை என்றும் இது குறித்து விரிவான ஆராய்ச்சி இருக்க வேண்டும் என்றும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இதை தாங்கள் நிரூபிப்போம் என்றும் விமான போக்குவரத்து அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

இராமாயணத்தைப் பொறுத்தவரை, விஸ்வகர்மா நிர்மாணித்த “புஷ்பக” என்ற விமானத்தைப் இராவணன் பயன்படுத்தினான் என்றும் இதிகாசத்தின் பிரகாரம் சீதையைக் கடத்திச் சென்றபோது இராவணன் விமானத்தைப் பயன்படுத்தியிருந்தான் எனவும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

எனவே இந்த முயற்சிக்கு பங்களிக்க விரும்பும் எவரும் இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பொருட்களை மின்னஞ்சல் மூலம் அபசசனிளூஉயய.டம அல்லது ஜூலை 31 க்கு முன் 076-6317110 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் விமான போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது.

வடமொழிப் புலவர் வால்மீகி இயற்றிய இதிகாசமான ராமாயணத்தின் முக்கியமான கதாபாத்திரம் ராவணன். இலங்கை மட்டுமல்லாமல் மூவுலகையும் அரசாண்ட பேரரசன் ஆவான்.

தன் தங்கை சூர்ப்பனகை யின் மூக்கை லட்சுமணன் அறுத்ததற்குப் பழிவாங்குவதற்கு புஷ்பக விமானத்தில் புறப்பட்ட ராவணன் சீதையைக் கவர்ந்து வந்து இலங்கையில் உள்ள அசோகவனத்தில் சிறை வைத்துவிடுவான்.

இந்தியாவில் பலர் ராவணனை அசுரனாகக் கருதிவந்தாலும் அவன் பலராலும் நாயகனாக வணங்கப்படுகிறான். இந்தியாவுக்கு ராவணன் வில்லனாக இருந்தாலும் இலங்கை தங்கள் நாட்டின் ஹீரோவாக போற்றி வருகிறது. அதன் காரணமாக புஷ்பக விமானத்தை மேற்கோள்காட்டி, உலகிலேயே முதன்முதலில் விமானத்தை இயக்கியவன் எங்கள் பேரரசன் ராவணன் என்று கூறியுள்ளது இலங்கை அரசு.

சிங்கள அரசு இலங்கையில் தமிழ் மொழி பேசும் இந்து சிறுபான்மை மக்களைக் கடுமையாகவே நசுக்கி வந்தா லும் சிவ பக்தனான ராவணனுக்கு மட்டும் புகழாரம் சூட்டி வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாடு ஒன்றில் ‘ஐந்தா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே விமானத்தை இயக்கிய பேரரசன்’ என்று புகழாரம் சூட்டியது இலங்கை. அது மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு இலங்கை அரசு ஏவிய முதல் செயற்கைக்கோளுக்கும் ‘ராவணன் - 1’ என்று பெயரைச் சூட்டியது குறிப்பிடத்தக்கது.

இராவணன். இந்த ஒற்றைப் பெயர் அத்தனை ஈர்ப்பு சக்தி கொண்டது. இதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், அந்த காலத்திலேயே விமானத்தை வைத்திருந்தான் இராவணன் என்கிறது இராமாயணம். அதற்கு புஷ்பக விமானம் என்ற பெயரையும் சொல்கிறது. ஒருவேளை இது கற்பனையாகக் கூட இருக்கலாம்.

ஆனால் அப்படி பறக்க முடியும் என்ற கற்பனையை உருவாக்கும் அளவுக்கு ஆதித் தமிழர்கள் தொழில்நுட்பம் நிறைந்த அறிவோடு இருந்திருக்கிறார்கள் என்றால் அதை நாம் நிச்சயம் மெச்சிக் கொள்ள வேண்டும்.

---

## இந்தியாவின் பெரு நகரங்களை கடந்து....

சுமித்ரா தேவி ஔரங்காபாத்தில் பரிசோதனை செய்ய சிரமப்பட்டார். அவரது நிலை தொடர்ந்து மோசமடைந்து வந்தபோதும் அவ ரால் ஆர்டி-பி.சி.ஆர் பரிசோதனை செய்ய முடியவில்லை. பாசிட்டிவ் முடிவுக்கான சான்றிதழ் இல்லாததால் அவரை சேர்த்துக் கொள்ள மருத்துவமனைகள் முன்வரவில்லை.

பிறகு அவரது குடும்பத்தினர் அருகே உள்ள மாவட்டத்தின் சிறிய தனியார் மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றனர், அங்கு அவருக்கு பரிசோதனை முடிவு பாசிட்டிவ் என வந்தது. ஆனால் மருத்துவமனை அவருக்கு சிகிச்சை அளிக்க வசதியில்லை என்று கூறியது. இதனால் அவரை மாநில தலைநகர் பாட்னாவில் உள்ள ஒரு பெரிய மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர், அங்கு அவர் அனுமதிக் கப்படுவதற்கு பல மணி நேரம் காத்திருந்த நிலையில், அவரது உயிர் பிரிந்தது.

**நைனிடால், உத்தராகண்ட் மாநிலம்**

இமயமலையில்உள்ளசுற்றுலாமாவட்டமானநைனிடால், அதிகரித்து வரும் பாதிப்புகளை சமாளிக்க போராடி வருகிறது. ஏப்ரல் 27ஆம் தேதி இங்குள்ள 142 ஐசியு படுக்கைகளில் குறைந்தது 131 படுக்கைகளில் நோயாளிகள் இருந்தனர். அதன் 771 ஒட்சிசன் படுக்கைகளில் 10 மட்டுமே காலியாக இருந்தன. இது கடந்த வாரத்தில் 4,000க்கும் மேற்பட்ட பாதிப்புகளாயின. இங்கு 82 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இந்த மாவட்டத்தால் இனி அதிக பாதிப்புகளை கையாளுவது கடினம் என்ற நிலை உள்ளது. காரணம், இங்கு ஏற்கெனவே சிகிச்சை வசதிகள் குறைவாக உள்ள தொலைதூரத்தில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மருத்துவமனைகளில் சேர்ந்திருக்கிறார்கள்.

தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாத ஒரு உள்ளூர் மருத்துவர், “நிலைமை மோசமாக இருக்கிறது. பார்க்கே பயமாக உள்ளது, என்று கூறினார்.

“நாங்கள் இந்த சூழ்நிலையில் இருக்க காரணம், தொலைதூர பகுதிகளில் மருத்துவ வசதிகளை பெருக்க அரசு திட்டமிடாததுதான். இங்கே இப்படி என்றால் தொலைதூர இமயமலை பகுதிகளில் பலரும் இறந்து போவார்கள். அவர்களை பற்றி நாம் அறியாமலேயே போய் விடுவோம். அரசின் கொரோனா இறப்பு புள்ளி விவரத்திலும் அவர்கள் இடம்பெற மாட்டார்கள்,” என்கிறார் அந்த மருத்தவர். ▮

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 1 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் 1 ஆசிரியர் - மு.வே.அன்பழகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) சமச்சீர் அற்ற உரு எது?




1. 2. 3. 4.

21) அதிக பகுதி நிழற்றப்படாத உரு எது?



1. 2. 3. 4.

22) தரப்பட்ட உருவை மேலிருந்து பார்க்கும் போது எவ்வாறு



1. 2. 3. 4.


23) தரப்பட்ட உருக்கோலத்தில் அடுத்துவரும் உருக்கள் எவை?






1. 2. 3.

24) தரப்பட்ட உருக்கோலத்தில் அடுத்துவரும் எழுத்துக் கோலம் எது?






1. 2. 3.

25)  ..........................................




1 2. 3. 4.


26)  இவ் உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை

1. 6 2. 4 3. 2

* எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு


27) 

1. 18 2. 19 3. 31


28) 

1. 12 2. 14 3. 16

* உருக்கோலத்தில் அடுத்துவரும் உரு யாது?

29) 

1. 2. 3.

30) 

1. 2. 3.

31) கதிரை என்பது என்ன என்பதை நன்கு விளக்கும் ஒரு வாக்கியத்தைக் கீழேயுள்ள வாக்கியங்களில் இருந்து தெரிவு செய்க.

1. **மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பொருள்**
2. **இருப்பதற்க்கும் பயன்படும் ஒரு தளபாடம்**
3. **எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு பொருள்**

* சரியான விடையைத் தெரிவு

32) 253 என்பதற்கு 352 போல 873 என்பதற்கு

1. 837 2. 387 3. 378


33) உழுதல் என்பதற்கு கலப்பை போல மண்வெட்டி என்பதற்கு அமையும் சொல்

1. **வெட்டுதல்** 2. **கொத்துதல்** 3. **மண்**

34) △ - □ = 2 இதற்கு ஏற்ப △ , □ பொருத்தமான இலக்கங்கள் முறையே

1. 5, 7 2. 21, 19 3. 9, 16

35) வெற்றிடத்தில் வரவேண்டிய உரு யாது?



1. 2. 3.

* தரப்பட்ட சம்பவங்களைச் சரியான ஒழுங்கு முறையில் காட்டும்

36) 

A B C D

1. B A C D 2. B C D A 3. B D C A

# புத்தாண்டு கொத்தணி தீவிரம் 7 நாளில் 7,000 தொற்றாளர்

## பல பிரதேசங்கள் முடக்கம்

கொழும்பு, மே.02

**நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மூன்றாம் அலை அதிதீவிரமடைந்துள்ள நிலையில் அதனைப் புத்தாண்டு கொத்தணி என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனடிப்படையில் கடந்த 7 நாள்களில் 7 ஆயிரத்துக்கும் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நாளாந்தம் இனங்காணப் படும் தொற்றாளர்களின் விவரங் களை அறிவிக்கும் ஊடக அறிக் கையில் புத்தாண்டு கொத்தணி என்று குறிப்பிட்டுள்ளது.

நாளாந்தம் ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங் காணப்படுகின்ற நிலையில் மே மாதம் 3 ஆம் திகதி திங்கள்கிழமை முதல் அடுத்த இரு வாரங்களுக்கு திருமணம் உள்ளிட்ட சகல பொது நிகழ்வுகளுக்கும் தடை விதித்துள்ள தாக இராணுவத்தளபதி சவேந் திர சில்வா அறிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாத்தளை, குருநாகல், மொனரா கலை, களுத்துறை மற்றும் பொல நறுவை உள்ளிட்ட மாவட்டங் களிலும் பல கிராம உத்தியோ கத்தர் பிரிவுகள் தனிமைப்படுத் தப்பட்டன.

இதற்கமைய நாட்டில் நேற்று முன்தினம் மாலை வரை 8 மாவட் டங்களில் 49 கிராம உத்தியோ கத்தர் பிரிவுகள் தனிமைப்படுத் தப்பட்டன.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு 10 மணிவரை 1636 தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர். இதற்கமைய நாட்டில் மொத்த கொரோனா தொற்றா ளர்களின் எண்ணிக்கை ஒரு இலட் சத்து 8 ஆயிரத்து 120 ஆக உயர் வடைந்தது. இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 95 ஆயிரத்து 975 பேர் குணமடைந் துள்ள போதிலும், 10 ஆயிரத்து 764 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு நேற்று முன்தினம் காலை 7 மணிமுதல் மாத்தளை, குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் சில பொலிஸ் பிரிவுகளும், கிராம உத்தியோகத் தர் பிரிவுகளும் தனிமைப்படுத் தப்பட்டன.

கடந்த 21 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை மாத்தளை, குருநாகல், மொனராகலை, களுத் துறை, கம்பஹா, திருகோண மலை, காலி மற்றும் பொலநறுவை ஆகிய 8 மாவட்டங்களில் 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், 6 பொலிஸ் பிரிவுகளும் தனிமைப் படுத்தப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை நாட் டில் இனங்காணப்பட்ட 1531 தொற்றாளர்களில் 533 தொற் றாளர்கள் கொழும்பைச் சேர்ந்த வர்களாவர் என்பது சுட்டிக்காட் டத்தக்கதாகும். கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் 146 தொற்றாளர்களும், கொழும்பில் ஏனைய பகுதிகளில் 387 தொற் றாளர்களும் இவ்வாறு இனங்கா ணப்பட்டனர்.

இந்நிலையில், கடந்த 23 ஆம் திகதி முதல் கொரோனா பரவல் 3 ஆம் அலை ஆரம்பித்தது. அன்றி லிருந்து நேற்று முன்தினம் வரை நாடளாவிய ரீதியில் 7764 தொற் றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி 969, 24 ஆம் திகதி 895, 25 ஆம் திகதி 793, 26 ஆம் திகதி 997, 27 ஆம் திகதி 1111, 28 ஆம் திகதி 1466 மற்றும் 29 ஆம் திகதி 1533 என கடந்த ஒரு வாரத்தில் இவ்வாறு 7 ஆயிரத்துக்கும் அதிக தொற் றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதேவேளை, கொரோனா தொற்றால் ஏற்பட்ட மரணங் களின் மொத்த எண்ணிக்கை 667 ஆக அதிகரித்துள்ளது. (எ)



# சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலக கட்டடத்தொகுதி திறப்பு

கொழும்பு, மே 02

சட்டமா அதிபர் திணைக் களத்தின் புதிய அலுவலக கட்ட டத் தொகுதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

1,480 மில்லியன் ரூபாய் செல வில் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதி, கேட்போர் கூடம், உணவகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளடங்களாக 12 மாடிகளைக் கொண்டுள்ளது.

புதிய கட்டடத் தொகுதியின் நினைவுப் பலகையை திறந்து வைத்த பிரதமர், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பிரித் பாராயண நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சர் அலி சப்ரி, சட்டமா அதிபர் தப்பு ல டி லிவேரா, நீதியமைச்சின் செய லாளர் பிரியந்த மாயாதுன்ன, பதில் சொலிசிற்றர் ஜெனரல் சஞ் ஜய ராஜரத்னம், மேலதிக சொலி சிற்றர் ஜெனரல் சுமதி தம்மவர்த் தன மற்றும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத் தின் தலைவர் உள்ளிட்ட அதிகா ரிகள் பலர் கலந்து கொண்ட னர். (எ)

# 21 வயது இளைஞன் மரணம்! தள்ளிவிட்டவரிடம் விசாரணை

திருகோணமலை, மே 02

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா கிளிகுஞ்சுமலைப் பகுதி யில் இளைஞன் ஒருவர் கீழே விழுந்து மரணித்தமை தொடர் பில் விசாரணைகளை ஆரம்பித் துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கன்னியா கிளிக்குஞ்சுமலை பகுதியிலுள்ள கட்டட பொருள் கள்விநியோகிக்கும் இடத்தில் மூவர் வேலை செய்து கொண்டிருந்த போது சக நண்பர் தள்ளியதில் விழுந்து உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தி னம் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் திரு கோணமலை - கன்னியா புதுக்குடி யிருப்பு - வரோதய நகர் பகுதி யைச் சேர்ந்த சிவலிங்கம் அருண் குமார் (21- வயது) என பொலி ஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

மூவர் கட்டட பொருள்கள் விநியோகிக்கும் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேளை இருவருக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் மற்ற நபரை தள்ளிவிட்டதாகவும் இதனையடுத்து அவர் மயங்கி கிடந்த நிலையில் 1990 அவசர அம்புலன்ஸ் மூலமாக திரு கோண மலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்ததாகவும் தெரியவரு கின்றது.

உயிரிழந்தவரின் சடலம் திரு கோணமலை பொது வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அவருடன் வேலை செய்து கொண்டிருந்த 17 வயது இளை ஞரை பொலிஸார் அழைத்துச் சென்று விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் உப்பு வெளி பொலிஸார் தெரிவித்த னர். (எ)

# பொலிஸ் நிலையமொன்றின் 30 அதிகாரிகளுக்கு தொற்று

கொழும்பு, மே 02

எதிமலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் 30 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த பொலிஸ் நிலையத்தின் 56 அதிகாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இவர் கள் அடையாளம் காணப் பட்டனர் என சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, புத்தல பிரதேசத்தில் 62 கொரோனா தொற்றாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டனர்.

தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து மூன்று நாள் களுக்கு புத்தல நகரின் விற்பனை நிலையங்களை மூட வர்த்தக சங்கத் துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக புத்தல பிரதேச சபையின் தவிசாளர் நந்தசிறி நிகவத்த தெரிவித்தார்.

இதேவேளை, குளியாப்பிட்டி நகர சபை தொடர் மாடிக் குடியிருப் பில் 55 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை யின் படி 67 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என குருநாகல் சுகாதார மருத்துவ அதிகாரி இந்துனில் கருணாதிலக தெரிவித்தார். (எ)

# அரச அதிகாரி விடுதியில் திருடிய மூவர் கைது

வவுனியா, மே 02

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள அரச அதிகாரி ஒருவரின் அரச விடுதியில் புகுந்து திருடிய குற்றச்சாட்டில் மூவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச அதிகாரி ஒருவரின் வீட்டுக்குள் கடந்த வாரம் புகுந்த திருடர்கள் 75 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் இரண்டரைப் பவுண் நகை என்பவற்றை திருடிச் சென்றிருந் தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் செய்யப் பட்ட முறைப்பாட்டையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவரைக் கைது செய்தனர். கைது செய்த மூவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ள பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# அம்பாறையில் மின்னல் தாக்கி மீனவர்கள் இருவர் உயிரிழப்பு!

அம்பாறை, மே 02

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில் மின்னல் தாக்குதலுக்குள் ளாகி மீனவர்கள் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாய்ந்தமருதிலிருந்து கடந்த புதன்கிழமை மாலை மீன்பிடிக்க கடலுக் குச் சென்ற நான்கு மீனவர்களில் நேற்று முன்தினம் இருவர் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தனர்.

சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த அன்ஸார் என்றழைக்கப்படும் இப்ராஹிம் இக்பால் (வயது - 42) மற்றும் எம்.எஸ். அர்சாத் (வயது - 35) ஆகியோரே மரணித்ததுடன் இவர்களின் ஜனாஸாக்கள் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் காயமடைந்த இப்ராஹிம் மன்சூர் (வயது- 43) (மரணித்த இப்ராஹிம் இக்பாலின் சகோதரர்) கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பொலநறுவை, களுத்துறையில் 16 பிரிவுகள் உடன் முடக்கம்

கொழும்பு, மே 02

பொலநறுவை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப் படுத்தப்பட்டன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார். இதன்படி, களுத்துறை மாவட்டத்தின் பதுரலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போல்லுன்ன, இங்குரு தலுவ, மிதலன, மோரபிட்டிய, பெலெத்த, ஹெடிகல்ல, மோரபிட்டி - வடக்கு ஆகிய கிராம உத்தியோ கத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டன.

அத்துடன், களுத்துறை - தீனியாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீனியாவல கிராம உத்தியோகத்தர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டது.

மேலும், களுத்துறை - மீகஹதென்ன பொலிஸ் பிரிவில், வலல் லாவிட்ட தெற்கு, மாகலந்தாவ, போதலாவ, கட்டுயகெலே - வெல் மீகொடை, பஹல ஹவெஸ்ஸ, மிரிஸ்வத்த மற்றும் பெலவத்த கிழக்கு ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்டன. இதேவேளை, பொலநறுவை மாவட்டத்தின், எலஹெர பொலிஸ்பிரிவின் சருபிம கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தலைவனின் சிறப்புரிமை!

மாலி

## செய்தியின் பின்னணியில்...

தமிழ் ஈழ அரசு ஒன்றை அமைக்கும் வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1976 மே 14ஆம் திகதி நிறைவேற்றப் பட்டது. அவசரகால சட்டத்தின்கீழ் பத்திரிகைத் தணிக்கை அமுலிலிருந்தது. தீர்மானம் முழுமையாக பத்திரிகைகளில் வெளியாகவில்லை. தீர்மான பிரசுரத்தை எம். பிக்களும் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் பொது இடங்களில் விநியோகித்தார்கள். இது ஒரு சட்ட மறுப்பு நடவடிக்கையாகவுமிருந்தது. குடியரசு தினமான மே 22ஆம் திகதி, யாழ். பஸ் நிலையத்தில் இப் பிரசுர விநியோகத்தில் இவர்கள் ஈடுபட்டார்கள். பொதுவாக, பொலிசாரின் பார்வை படுகின்ற வேளைகளில் எம். பி. ஒருவர் பிரசுரத்தை விநியோகிப்பார். அப்போது அவர் கைது செய்யப்படுவார். பின்னர், மற்றொருவர் விநியோகிப்பார். அவரும் கைதுசெய்யப்படுவார். இப்படி, அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோரும் (இவர்கள் இருவரும் அப்போது எம். பி. க்கள் அல்லர்) வி. என். நவரத்தினம், கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு, ஜீப் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர். பெரியவர் எஸ். ஜே. வி. செல்வநாயகமும் பஸ் நிலையத்தில் கதிரை ஒன்றில் அமர்ந்து, இதேவிதமாக பொலிசார் வரும் வேளைகளில் விநியோகிப்பார். ஆனால், பொலிசார் எவரும் அவர் பக்கம் திரும்புவதில்லை, கண்டுகொள்வதில்லை.

மு. சிவசிதம்பரம் விடுதலைசெய்யப்பட்டார். ஏனையோர்மீது, தேசதுரோக குற்றச்சாட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. யூரர்கள் அற்ற 'ட்ரயல் அற் பார்' விசாரணையாக, அமிர்தலிங்கம் மீதான விசாரணை முதலில் தொடங்கியது. இது, இலங்கையின் சட்ட வரலாற்றிலும் அரசியல் வரலாற்றிலும் முக்கியமானதொன்றாகியது. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், வி. எஸ். ஏ. புள்ளநாயகம் உள்பட 70க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இதில் ஆஜராகினர்.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அவசரகால சட்டம் உரிய விதத்தில் பிரகடனப்படுத்தப்படவில்லை என்று ஜீ. ஜீ. பொன்னம்பலம் வாதிட்டார். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அரசியலமைப்பு வலுவற்றது என்று திருச்செல்வம் வாதிட்டார்.

திருச்செல்வத்தின் வாதத்தில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் இந் நீதிமன்றத்துக்கு இல்லை என்று தெரிவித்த நீதிமன்றம், ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, செல்லுபடியற்ற அவசரகால சட்டத்தின்கீழான இந்த வழக்கை தொடர்ந்தும் நடத்த இயலாததில் அனைவரையும் விடுவிப்பதாக தீர்ப்பளித்தது. (இத் தீர்ப்பு, அரச நடவடிக்கைகள் பலவற்றை ஆட்டம் காண வைத்தது.)



'ட்ரயல் அற் பார்' தீர்ப்பின் பின்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், மு. திருச்செல்வம்

1976 செப்ரெம்பர் 10ஆம் திகதி இத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு மாதங்களில் நவம்பர் 23ஆம் திகதி திருச்செல்வம் காலமானார். உண்மை யில், இந்த வழக்கில் இவர்கள் மிகக் கடுமையாக உழைத்தார்கள். வழக்கு முடிந்த சில வாரங்களில் திருச்செல் வத்தை அவரது இல்லத்தில் சந்தித்த போது, சாய்வு நாற்காலியில் அமர்ந்தி ருந்த அவர், 'நான் மிக களைத்துப் போனேன் தம்பி' என்று கூறியது நினைவில் எப்போதும் நிற்கிறது. (ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1977 பெப்ரவரி 9ஆம் திகதி மரணமுற்றார்.)

திருச்செல்வத்தின் அநுதாப தீர்மானம்மீது பாராளுமன்றத்தில் செல்வநாயகம் பேசினார். அதுதான் பாராளுமன்றத்தில் அவரது கடைசிப் பேச்சு. அதற்கு சில தினங்களுக்கு முன்னதாக, வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில் நவம்பர் 19ஆம் திகதி பேசினார். ஓர் அரசியல் தலைவராக பாராளுமன்றத்தில் அவரது கடைசிப் பேச்சாக அதனையே கொள்ளலாம். அது, இலங்கைத் தமிழ் இனத்தின் வரலாற்றிலும், இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் ஒரு முக்கிய பேச்சு. ஆறு மாதங்களுக்கு முன்னதாக நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தன்னுடைய அரசியல் பாதையின் திருப்பத்தை அவர் அறிவித்தார். தமிழ் அரசுக் கட்சியின் தரப்பில் கடைசி உரையை, விவாதத்தின் இரண்டாவது வாசிப்பின் வாக்கெடுப்பு தினமான அன்று, சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாக செல்வநாயகம் நிகழ்த்தினார்.

மதிய இடைவேளைக்கு பின்னர் சபை கூடியபோது, பெரியவர் செல்வநாயகம் பேச எழுந்ததுமே அரசு, எதிர்க்கட்சி இருதரப்பிலும் அனைவருமே தங்கள் 'இயர்போன்'களை மாட்டிக் கொண்டு, அவதானமாக ஆயத்தமானார்கள்.

கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்தபடி, சபாநாயகரை நோக்கி மிகுந்த உசாராக அன்று அவர் பேசினார். அவருடைய நிலை, பேச்சு இரண்டுமே அன்று மிடுக்காகவே இருந்தன.

'இந்த நாட்டில் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த இரண்டு பிரதமர்களுடனும் தமிழர் பிரச்னைகுறித்து ஒப்பந்தம் செய்தேன். ஆனால், அவர்கள் இருவருமே பின்னர் சிங்கள மக்களுக்குப் பயந்து, அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றவில்லை. இந்நிலையில், சமஷ்டி கோரிய நாம், அக்கொள்கையினைக் கைவிட்டு, அடுத்த நிலைபற்றி நிதானமாக யோசித்தோம். தனிநாடு ஒன்றுதான் எமக்குள்ள ஒரேவழி என்ற முடிவுக்கு வந்தோம். தனிநாடு அமைப்பதென்பது சுலபமானதொன்றல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும், இந்த நாட்டில் நாம் சிங்கள மக்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும். அல்லது, அழிந்துபோகவேண்டும்.

'நமது மூதாதையர் புத்திசாலிகளாக இருந்தனர். தமக்கென்று ஒரு நாட்டை அவர்கள் வைத்திருந்தார்கள்.

'நாம் பிரிந்துபோவதை இந்த அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் மறுத்தாலும், இனி வரப்போகின்ற ஒரு சிங்கள அரசாங்கம் எமது நாட்டைப் பிரித்துத் தரும். அயர்லாந்து நூறு வருடங்களுக்குமேல் போராடி பிரிந்துசென்றது. நாம் எமது முடிவை உலகநாடுகளுக்கு அறிவித்து விட்டோம். எமது கோரிக்கைகளை அவை ஏற்றுக் கொள்ளும்.

'சாத்வீகமான முறையிலேயே போராடுவோம். இந்த நாட்டில் நாம் உரிமை பெறுவோம். அல்லது, அழிந்து போவோம். இந்தப் பின்னணியில்தான் எமது கொள்கை இருக்கின்றது. எங்கள் எதிர்காலம் எங்கள் சிந்தனையிலேயே தங்கியிருக்கிறது.'

- பெரியவர் செல்வநாயகத்தின் பேச்சு இந்தவிதமாக இருந்தது.

நாட்டைப் பிரிக்கும் விதத்திலான ஓர் அறைகூவலாக செல்வநாயகம் பாராளுமன்றத்தில் இப்படிப் பேசிவிட்டாரென்பதை அறிந்ததும், அரசாங்கம் என்ன பதில் அளிக்கப்போகிறது என்பதில் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் பத்திரிகை நிருபர்கள் கலரியை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

எனினும், யப்பான் சென்று அன்று திரும்பிய பிரதமருக்கு (திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க) பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பொலீஸ் அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக, அவர் சபையுள் பிரவேசித்ததும் எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். கிரியல்ல எம். பி.யான வாசுதேவ நாணயக்கார, மலர் வளையம் ஒன்றைச் சபையினுள் பிரதமரின் ஆசனத்தை நோக்கி வைத்துவிட்டு வெளியேறினார்.

- இந்த அமளிதுமளிகளில், பெரியவர் செல்வநாயகத்தின் பேச்சுக்கு அரசாங்கம் அன்று பதிலளிக்கவில்லை. 'நாட்டில் மொழிப் பிரச்னை இருக்கிறது' என்று மாத்திரம் சொன்ன நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, அதற்கு தமிழ்த் தலைவர்களையும் குற்றம் சொன்னார்.

"நேற்று நான் பேசும்போது நீர் இருந்தீரா?"

மறுநாள், அவருடைய இல்லத்தில் செல்வநாயகம் கேட்டார்.

"ஓம், சேர்".

"நான் பேசியது துலாம்பரமாக கேட்டதா?"

"ஓம், சேர். வெகு தெளிவாக இருந்தது." - நான் சொன்னேன்.

"சிலவேளைகளில் நான் பேசுவது தெளி வாக கேட்காது." - அவர் சொன்னார்.

"எல்லோரும் உங்கள் பேச்சை உன்னிப்பாக கேட்டார்கள்." - நான் சொன்னேன்.

"நானும் கவனித்தேன். நான் பேசும்போது ஜே. ஆர். எல்லோரும் 'இயர் போனை' எடுத்து, நான் பேசுவதைக் கேட்டார்கள்." - அவர் சொன்னார்.

- மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இவற்றையெல்லாம் அவர் அவதானித்திருக்கிறார்.

"நான் பேசியது சரிதானே? நான், இரண்டு பிரதமர்களுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறேன். அப்படியிருக்க, டயஸ் பண்டாரநாயக்க நான் பேச்சுவார்த் தைக்கு வரவில்லை என்று கூறுவது பிழை" என்றார்.

அவருடைய பேச்சிலும் கிரகிப்பிலும் அவரின் நிதானத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஒரு 'குழந்தையைப் போல' அவர் அப்போது பேசினார்.

ஆக, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை செல்வநாயகம் அன்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். பாராளுமன்றத்தில் (தேசிய அரசுப் பேரவை) அப்போது 13 தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் இருந்தனர். கட்சியின் நடவடிக்கை, கொள்கை தொடர்பில் இத்தகைய ஓர் அறைகூவலை அவர் அன்று விடுக்கப்போகிறார் என்பதை கட்சி பாராளுமன்றக் குழு அறிந்திருக்கவில்லை. பாராளுமன்றத்தில் அப்போது தமிழ் அரசுக் கட்சியின் பிரதான பேச்சாளராக இருந்தவர் மானிப்பாய் எம். பி., வி. தர்மலிங்கம். 'பேச்சொன்று தயாரித்து தரும்படி பெரியவர் கேட்டார். இவர் எங்கே பேசப்போகிறார் என்ற நினைப்பில், நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை' என்று, தர்மர் பின்னர் சொன்னார்.

அன்று அந்த உரையை செல்வநாயகம் ஆற்றியிருக்காவிட்டால், அதன் பின்னர் அப்படி ஓர் உரையை அவர் ஆற்றியிருக்கமாட்டார். ஆனால், குழந்தை உள்ளமும் தீர்க்க தரிசனமுமான அந்த தலைவர், கட்சி ஒழுங்கை மீறினாரா அல்லது கட்சி ஒழுங்குக்கு அமைவாக நடக்கவில்லையா?

அல்லது, அது ஒரு 'தலைவனின்' சிறப்புரிமையா?



'ட்ரயல் அற் பார்' நீதிமன்றத்தில் எஸ். ஜே. வி. செல்வநாயகம், மு. திருச்செல்வம், கனக. ஈஸ்வரன், ஜீ. ஜீ. பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி

## இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

### மணமகன் விபரம்

**18376|வே|1982**
மாவிட்டபுரம்|இந்து|யாழ்
168 செ.மீ |பட்டதாரி
Procurement Officer|
சதயம் (கும்பம்)

**18328|வே|1983**
வயாவிளான்|இந்து|யாழ்
170 செ.மீ |சூ.செ:10
Technician
அத்தம்(கன்னி)|உயர்தரம்

**18484|வே|1984**
நல்லூர்|இந்து|Uk
178 செ.மீ|செ.வ் : 04
Customer Assistant
மகம் (சிம்மம்)|டிப்ளோமா

**18843|வே|1984**
புங்குடுதீவு|Divorced|UK
169 செ.மீ |டிப்ளோமா
Owner of petrol Station
சித்திரை (துலாம்)|செ: 01

**18780|வே|1984**
கொழும்பு|இந்து
180 செ.மீ |யாழ்ப்பாணம்
Environmental Officer|
பூனர்பூசம் (மிதுனம்)

**17823|வே|1985**
சாவகச்சேரி|இந்து
170 செ.மீ|செவ் :07
Business|Swis|உயர்தரம்
மிருகசீரிடம்(ரிஷபம்)

**18741|வே|1985**
கொடிகாமம்|இந்து
177 செ.மீ| செ: 01
System Analysist
விசாகம்(துலாம்) |பட்டதாரி

**18535|வே|1986**
மாவிட்டபுரம்|இந்து|Divorced
185 செ.மீ |செவ் :04
Operation Manager|Au
கார்த்திகை (ரிஷபம்)|பட்டதாரி

**18550|வே|1986**
பருத்தித்துறை|இந்து|Ch
175 செ.மீ|செ.வ் :12
Software Architect|Div
பூரம் (சிம்மம்) |பட்டதாரி

**18553|வே|1987**
காரைநகர்|இந்து
178 செ.மீ |US
Senior Network Engineer
விசாகம் (துலாம்)|பட்டதாரி

**18010|வே|1988**
சுழிபுரம்|இந்து|UAE
201 செ.மீ |செவ்: 08
Inchrage| பட்டதாரி
அத்தம் (கன்னி)

**18834|வே|1988**
யாழ்நகரம் |இந்து|கண்டி
183 செ.மீ|டிப்ளோமா
Managing Directer
ரேவதி (மீனம்)|டிப்ளோமா

**18750|வே|1989**
நல்லூர்|இந்து|France
180 செ.மீ |செ : 04
Shop owner|டிப்ளோமா
திருவாதிரை (மிதுனம்)

**18070|கோ |1989**
கரவெட்டி|இந்து|Canada
சூ.செ :05| Surveyor
163 செ.மீ |பட்டதாரி
மிருகசீரிடம் (ரிஷபம்)

**18379|வே|1990**
அளவெட்டி|இந்து|யாழ்
182 செ.மீ|செவ் : 07
Engineer|பட்டதாரி
சுவாதி (துலாம்)

**18696|வே|1990**
காரைநகர்|இந்து
171 செ.மீ |பட்டதாரி
Qs |Oman
பூரட்டாதி (கும்பம்)

**18840|வே|1991**
மூளாய்|இந்து|கொழும்பு
180 செ.மீ |செவ் :02
IT Consultant|பட்டதாரி
பரணி (மேடம்)

**18816|வே|1991**
கொழும்பு|இந்து
169 செ.மீ
Assistant Manager
புனர்பூசம் (மிதுனம்)

**18388|வே|1991**
நல்லூர்|இந்து|AU
166 செ.மீ |செவ்: 07
Engineer
பட்டதாரி|
திருவாதிரை (மிதுனம்)

**18511|வே|1991**
நல்லூர்|இந்து|கொழும்பு
165 செ.மீ|பட்டதாரி
Software Engineer
உத்திரட்டாதி(மீனம்) |சூ.செ:08

**18837|வே|1993**
காரைநகர்|இந்து|கொழும்பு
179 செ.மீ|செ.வ் : 08
Software Engineer|பட்டதாரி
அவிட்டம் (மகரம்)

**18819|கோ|1985**
தெல்லிப்பளை|இந்து|UK
177 செ.மீ |சூ.செ:05
Business பரணி(மேடம்)
பட்டதாரி

**18852|நா|1993**
கொழும்பு |இந்து
155 செ.மீ |செவ் :12
Civil Engineer& manager
மகம் (சிம்மம்) | பட்டதாரி

**18861|வே|1995**
கொழும்பு|இந்து|
180 செ.மீ|பட்டதாரி
Civil Engineer
அனுஷம் (விருச்சிகம்)

### மணமகள் விபரம்

**18568|வே|1983**
கொழும்பு |கிறிஸ்தவம்
160 செ.மீ |சூ .செ :02
Manager at Bank
சித்திரை(கன்னி) |பட்டதாரி

**18714|வே|1985**
திருநெல்வேலி|இந்து|Col
Assistant production
manager|Divorced
உத்திரட்டாதி (மீனம்)|பட்டதாரி

**18610|வே|1986**
வட்டுக்கோட்டை|இந்து| யாழ்
162 செ.மீ |கி.பா : 11
Senior Accountant
பூரம் (சிம்மம்) | பட்டதாரி

**15266|வே|1986**
வட்டுக்கோட்டை|இந்து|Col
170 செ.மீ |Assistant
Accountant|டிப்ளோமா
அஸ்வி னி (மேடம்)

**18747|வி|1986**
கொழும்பு|இந்து
160 செ.மீ |செவ் :02
Engineer|பட்டதாரி
பரணி (மேடம்)

**18726|வே|1987**
புங்குடுதீவு|இந்து|கொழும்பு
Div| 151 செ.மீ|செ.வ் : 07
சுவாதி (துலாம்)
உயர்தரம்

**18601|வே|1988**
வேலணை|இந்து|கொழும்பு
153 செ.மீ |டிப்ளோமா
Account Assistant
ரேவதி (மீனம்)

**18678|வே|1989**
சுன்னாகம்|இந்து|யாழ்
160 செ.மீ |சூ.செ : 05
Junior Executive at Bank
பூராடம் (தனுசு) |பட்டதாரி

**18828|வே|1990**
மயிலிட்டி|இந்து|canada
Immigration Officer
திருவாதிரை (மிதுனம்)
பட்டதாரி| 160 செ.மீ

**18481|வே|1990**
நயினாதீவு|இந்து|கொழும்பு
156 செ.மீ |செ.வ் : 12
Legal Officer|பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**18574|வே|1991**
மானிப்பாய்|இந்து|யாழ்
155 செ.மீ |செவ் :08
Teacher (Training-A/L Bio)
பரணி (மேடம்) |பட்டதாரி

**18873|வே|1992**
மன்னார்|இந்து|
158 செ.மீ|பட்டதாரி
Assistant Director Of Planning
பூராடம் (தனுசு)

**14868|வே|1992**
இளவாலை|இந்து| யாழ்
170 செ.மீ |Doctor
பட்டதாரி
திருவாதிரை (மிதுனம்)

**18732|வே|1992**
வேலணை|இந்து
153 செ.மீ |செவ் :02
Teacher|டிப்ளோமா
விசாகம் (துலாம்)

**14766|வே|1993**
கல்வியங்காடு|இந்து|யாழ்
154 செ.மீ|கி.பா : 30
Medical Student
மிருகசீரிடம் (ரிஷபம்)

**18813|வே|1993**
நல்லூர்|இந்து|கொழும்பு
156 செ.மீ |செவ் : 12
Engineer | பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**18765|கோ|1993**
பருத்தித்துறை|இந்து|யாழ்
162 செ.மீ |செவ் :12
Final year Student
மிருகசீரிடம் (மிதுனம்)

**18825|வே|1993**
கரணவாய்|இந்து| கொழும்பு
160 செ.மீ|செ.வ் : 08
Software Engineer|பட்டதாரி
திருவோணம் (மகரம்)

**18385|வே|1993**
திருநெல்வேலி |இந்து
152 செ.மீ | யாழ்
Designer|டிப்ளோமா
விசாகம்(துலாம்)

**18879|ந|1994**
யாழ்நகரம்|கிறிஸ்தவம்
162 செ.மீ |செவ் :04
Software Engineer
கார்திகை(ரிஷபம்)|பட்டதாரி

**14640|வே|1994**
மாவிட்டபுரம்|இந்து|Uk
152 செ.மீ|செ.வ் : 07
Project Manager
பூரம் (சிம்மம்)|பட்டதாரி

**18768|வே|1997**
வட்டுக்கோட்டை|இந்து
159 செ.மீ |கொழும்பு
திருவாதிரை (மிதுனம்)
பட்டதாரி|Student

**18382|பண்|1997**
உருத்திரபுரம்|இந்து
183 செ.மீ |டிப்ளோமா
Operation Executive
பூசம் (கடகம்)

**18759|வே|1997**
காரைநகர்|இந்து|யாழ்
158 செ.மீ|செ.வ் : 01
Medical Student
|மிருகசீரிடம் (ரிஷபம்)




தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 23
**இணையத்தில் வாசிக்க**
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு
இலக்கத்தை
(Profile No) Whatsapp 94777164524
இற்கு அனுப்பி
குறித்த வரனின் முழுமையான விபரத்தை
பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை தேர்தலில் பெண்களுக்கு 30 வீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும்

## உழைக்கும் மகளிர் அமைப்பு யாழில் நேற்று வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே.02

**எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பெண்களுக்கு 30 வீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என உழைக்கும் மகளிர் அமைப்பின் இயக்குநர் மிதுலைச்செல்வி சிறிபத்மநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

உழைக்கும் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழில் நேற்று இடம்பெற்ற மே தின ஒன்று கூடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பெண்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சமூக பொருளாதார ரீதியாக முன்னேற வைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். மே தினமாகிய இன்று (நேற்று) நாம் ஒரு பெரிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், தற்போதய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதனை நிறுத்தியுள்ளோம். இருப்பினும் ஒரு சிறிய ஒன்றுகூடல் மேற்கொண்டுள்ளோம்.

மேலும், மாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் போது பெண்களுக்கு 30 வீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இம்முறை தமிழ்ப் பெண்கள் எவரும் பாராளுமன்றம் செல்லவில்லை. ஆனால், பெரும்பான்மை கட்சிகளில் பெண்கள் பலர் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றுள்ளனர். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெண்களில் ஒருவரும் பாராளுமன்றம் செல்லவில்லை என்பது குற்றச்சாட்டாக காணப்படு கின்றது.

யுத்த காலத்திலிருந்து பெண்களாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றோம். எனவே, பெண்கள் எமது பிரச்னையை தீர்ப்பதற்கு நாமே பாராளுமன்றம் மற்றும் ஏனைய சபைகளுக்கு செல்வதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்.

எனவே, எம்மைப் போன்ற பெண்களை பாராளுமன்றம் அனுப்புவதன் மூலம் தங்களுடைய பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்வார்கள். எனினும், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கும் முகம்கொடுத்துக் கொண்டு கையேந்தி நிற்கும் நிலை காணப்படுகின்றது. பலர் கடனாளிகளாக இருக்கின்ற நிலை காணப்படுவதோடு பலர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

சமூக மட்டத்தில் பல பாதிப்புக்களை எதிர்நோக்கி இருக்கிறார்கள். எனவே அவ்வாறான பெண்களின் வாழ்வாதாரத்தை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே நாங்கள் எமது அமைப்பின் மூலம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் போயா தினங்களில் அனைத்துப் பெண்களையும் இணைத்து ஒன்றுகூடல்களை நடத்துவது வழக்கம்.

அதேபோலத்தான் மே தினமாகிய இன்றைய தினம் (நேற்று) இந்த ஒன்றுகூடலை ஏற்பாடு செய்திருக்கின்றோம். எமது மே தின கோரிக்கையாக 30 வீதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

முக்கியமாக தமிழ்க் கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியாக இருக்கலாம் ரெலோ, புளொட் மற்றும் விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன் போன்ற அனைவரின் தமிழ்க் கட்சிகளும் பெண்களுக்கு 30 வீத இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்பதுதான் மே தினமாகிய இன்றைய தினம் எமது கோரிக்கையாகும்.

ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் ஒரு கருத்தை வைத்திருக்கின்றார்கள். வெல்லக்கூடிய பெண்களை தேர்தலில் நிறுத்துவது இல்லை. வெற்றிபெற முடியாத பெண்களை நிறுத்தி விட்டு பெண்கள் தேர்தலில் வெல்ல மாட்டார்கள் எனக் காண்பிப்பது வழமையானது. எனவே,

அனைத்து தமிழ்க் கட்சிகளும் 30 வீத இட ஒதுக்கீட்டை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வழங்க வேண்டும் என்பதுதான் மே தினத்தில் எமது கோரிக்கையாகக் காணப்படுகின்றது. பல்வேறுபட்ட திறமையான பெண்கள் உள்ளார்கள். அவர்களை தேர்தலில் நிறுத்தினால் கட்டாயம் வெல்வார்கள். திறமையானவர்களைத் தேர்தலில் நிறுத்தி அவர்களை மாகாண சபைக்கு அனுப்பி வைக்க அனைத்துக் கட்சிகளும் இந்தக் கோரிக்கைக்கு உடன் பட வேண்டும்- என்றார். (எ)

# பாடசாலைகள் மீண்டும் மூடல்



கொழும்பு, மே 02

நாட்டின் அனைத்து பாடசாலைகளையும் எதிர்வரும் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்தும் மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தீவிரமடைந்து வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் வரையில் நாட்டின் அனைத்து பாடசாலைகளையும் மூடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே, எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அனைத்துப் பாடசாலைகளையும் மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீதிமன்ற நடவடிக்கைகள் 5 நாளுக்கு மட்டுப்படுத்தல்

கொழும்பு, மே 02

நீதிமன்ற நடவடிக்கைகளை ஐந்து நாள்களுக்கு மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாளை 03 ஆம் திகதி முதல் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன என நீதி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் யூ.ஆர்.டி சில்வா தெரிவித்தார்.

இந்தத் தினங்களில் சந்தேகநபர்கள் மற்றும் பிரதிவாதிகள் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்தார். (எ)

# ஹோட்டல்களில் விருந்துபசாரம் இரண்டு வாரங்களுக்குத் தடை

## இராணுவ தளபதி அறிவிப்பு



கொழும்பு, மே 02

மே முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு ஹோட்டல்களில் இடம்பெறும் விருந்துபசாரங்கள், கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் இரவுநேர கேளிக்கை களியாட்டங்கள் போன்றன வற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இரவு 10 மணிக்குப் பின்னர் இந்த நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். (எ)

# 72 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா சில்லாலையில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 02

யாழ். சில்லாலை கடற் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 240 கிலோ கிராமுக்கு மேற்பட்ட கேரளகஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் சந்தைப்பெறுமதி சுமார் 72 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் வடபிராந்திய கடற்படை கட்டளையகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது 105 பொதிகளில் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இவை அனைத்தும் கடத்தல் காரர்களால் வேறு பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது.



இந்நடவடிக்கைகள் அனைத்தும் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டன. (எ)

**ENGLISH LANGUAGE & ENGLISH LITERATURE CLASSES**

- English Literature - Grade : 09.10.11and A/L
- English Language - Grade : 6,7,8,9,10,11, A/L

மற்றும் : - தொழில் புரிவோர்
- O/L,A/L எடுத்தவர்கள்
- பல்கலைக்கழக மாணவர்கள்
- தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்
- தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

K.K.S வீதி அருகில்,
NSB Bank Lane, உடையார் வளவு, சுன்னாகம்.

தொடர்பு:
076 046 9242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொலார்ட் மிரட்டல் ஆட்டம்: சென்னையை வென்றது மும்பை!



டில்லி, மே 02

இறுதிப் பந்து வரை விறுவிறுப்பு ஏற்படுத்திய போட்டியில், பொலார்ட்டின் மிரட்டலான ஆட்டத்தால் 4 விக்கெட்களால் சென்னையை வெற்றி கொண்டது மும்பை.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு 27ஆவது போட்டி நடந்தது. இதில், சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

டில்லியில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸின் தலைவர் ரோஹித் சர்மா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு கெயிக் வாட், டூ பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது. கெயிக் வாட் ஒரேஒரு பௌண்ட்ரியை மட்டும் அடித்து போல்ட்டின் பந்தில் ஹார்திக் பாண்ட்யாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய பிளசிஸுடன் இணைந்த மொயின் அலி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 36 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்கள் எனப் பறக்கவிட்ட மொயின் அலி 58 ஓட்டங்களைக் குவித்து பும்ராவின் பந்தில் விக்கெட் காப்பாளர் டி கொக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து 28 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் அரைச்சதம் தொட்ட டூ பிளசிஸ், பொலார்ட்டின் பந்தில் பும்ராவிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா 2 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

அடுத்து இணைந்த அம்பதி ராயுடு - ஜடேஜா இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ராயுடு அதிரடி காட்ட, மறுமுனையில் ஜடேஜா நிதானம் காட்டினார்.

20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 218 ஓட்டங்களை குவித்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

27 பந்துகளில் 7 சிக்ஸர்களையும், 4 பௌண்ட்ரிகளையும் விளாசி ராயுடு 72 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 2 பௌண்ட்ரிகள் 22 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பையின் சார்பில் பந்துவீசிய கிரன் பொலார்ட் 2 விக்கெட்களையும், போல்ட், பும்ரா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

219 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை விரட்ட ஆரம்பித்தது மும்பை இந்தியன்ஸ்.

தொடக்கம் கொடுத்த டி கொக் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 38 ஓட்டங்களையும், ரோஹித் சர்மாவும் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

சூரியகுமார் யாதவ் 3 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த குர்னல் பாண்ட்யா 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கிரன் பொலார்ட் அதிரடியில் மிரட்டினார்.

17 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் என்ற சற்றுக் கடினமான நிலையில் இருந்தது மும்பை இந்தியன்ஸ். ஆனால், கிரன் பொலார்ட்டின் ஆட்டம் மும்பை ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவருக்கு துணையாக ஹார்திக் பாண்ட்யா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

18ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியை பொலார்ட் விளாச, அந்த ஓவரில் இருவரும் 17 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று மும்பைக்கு நம்பிக்கை கொடுத்தனர்.

19ஆவது ஓவரின் முதல் இரு பந்துகளையும் சிக்ஸருக்கு பறக்க விட்டார் ஹார்திக் பாண்ட்யா. மூன்றாவது பந்தில் இரு ஓட்டங்களை எடுத்தவர், நான்காவது பந்தில், 16 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நீசம் ஓட்டம் எதையும் பெறாமலே 19ஆவது ஓவரின் இறுதிப் பந்தில் வீழ்ந்தார். எனினும் அந்த ஓவரில் 15 ஓட்டங்களை எடுத்தமையால், இறுதி ஓவரில் 16 ஓவர்களை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

நிகிடி வீசிய இறுதி ஓவரை எதிர்கொண்டார் கிரன் பொலார்ட். முதல் பந்து முழுஅளவு பந்தாக தாழ்ந்து வந்தது (Low full-toss). அதைத் தடுத்து ஆடினார் பொலர்ட்.

மிடில் யோர்க்கராக வீசப்பட்ட இரண்டாவது பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டிய பொலார்ட், மூன்றாவது பந்திலும் பௌண்ட்ரி அடித்தார்.

நான்காவது பந்தையும் நிகிடி மீண்டும் முழுஅளவு பந்தாக வீசினார். அந்தப் பந்தையும் தடுத்தே ஆடினார் பொலார்ட். இதனால், மும்பை இந்தியன்ஸ் ரசிகர்களின் இதயத் துடிப்பு எகிற ஆரம்பித்தது. ஆனால், அடுத் பந்திலேயே சிக்ஸரை பறக்கவிட்ட பொலார்ட் அவர்களுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தார். அடுத்த இறுதிப் பந்தில் 2 ஓட்டங்களை எடுத்து மும்பை அணிக்கு வெற்றியைக் கொடுத்தார் பொலார்ட்.

இறுதியில் மும்பை இந்தியன்ஸ் 4 விக்கெட்களால் சென்னையை வெற்றி கொண்டது. பொலார்ட் 8 சிக்ஸர்களையும், 6 பௌண்ட்ரிகளையும் விளாசி 34 பந்துகளில் 87 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

சென்னையின் பந்து வீச்சில் சாம் கரன் 3 விக்கெட்களையும், தாகூர், ஜடேஜா, மொயின் அலி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக 87 ஓட்டங்களை குவித்ததுடன் இரு விக்கெட்களையும் கைப்பற்றிய கிரன் பொலார்ட் தெரிவானார். (ஐ)


# மரண அறிவித்தல்

## சாமிநாதன் சாந்தகுமார்



இல.26, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வே stavanger ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதன் சாந்தகுமார் அவர்கள் கடந்த (29.04.2021) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதன் - பூபதி தம்பதியரின் தவப் புதல்வரும், திருநெல்வேலியைச் சேர்ந்த கோபால் - விமலகாந்தி தம்பதியரின் மருமகனும், சுபாணியின் அன்புக் கணவரும், காயத்திரி, குபேரன், ஐஸ்வரி, ருத்திரன் (அர்ஜீன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிர்மலா, வசீகரி, ஜெயமாலா, பிறேமிளா, வட்சலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாரங்கி, தரஞ்யா, யெய்சன், சகியா, சயனா, அஸ்வின், யஸ்யா, மான்சி, அஜய், சஹானா, சாதனா, சிவசரன், யாசிகன், சாரங்கன் ஆகியோரின் மாமனாரும், சந்திரபவன், பிரதீபன், ஸ்ரீகரன், பிறேமானந், துஸ்யந்தன், சுஜன், ஜனார்த்தனி, நிசா, ஜென்ஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 26, கோணவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
பூபதி (தாய்)
0772537860


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை- தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : coffee with பிரமுகர்
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்

**இரவு**
7.00 மணி : SPOT LIGHT - வன்னி மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர்
சார்ஸ் நிர்மலநாதன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி : பதிவு - வாசன் ரட்ணசிங்கம்
அரச மருத்துவ அதிகார சங்க
செயற்குழு உறுப்பினர்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org